





அன்பே சிவம்





27-1-2024









pax.ravichandra@gmail.com

Pax Ravichandra





ஆனந்தக் கீர்த்தனை

பசியும், காமமும் உடல் சார்ந்தவை
உணவோடு, காமமும் உடல் சார்ந்த பசியே
இனப்பெருக்கத்தின் மாறாத அதிசய விதியே
காமம் உடல் கடந்து இதயம் நிறைந்து
காதலாகி மலர்ந்தால்-அற்புதம்

காமம்-மலராமல், தன்னிலை உயராமல்
உடல் சார்ந்து நின்றாள்-வெறும்
உடலுறவாகிப்போகும் துயரம்

காமம், காதலாகி மலர்ந்தாள்-இதயங்கள் மலர்ந்திட
இரு உடல்களும் உள்ளங்களும்
ஒன்றாயச் சங்கமித்திட சமாதியின் அற்புதம்
அமைதியின் ஆனந்தம்

காமம் உடல் சார்ந்த உறவு
காதல் இதயம் சார்ந்த உறவு-
பிரார்த்தனை ஆன்மா சார்ந்த உறவு

காமம், காதல் கடந்தால் ஆன்ம தரிசனம்
கடவுளாகும் நிதரிசனம்
வார்த்தைகளால் விளக்க முடியாத
ஆனந்தக் கீர்த்தனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-11-05-2023

ஆதித் திராவிடர்

பசு மூத்திரத்தையும், சாணத்தையும்-பார்பனர்
பவித்திரம் என்பார்-கீழ்சாதி பறையரும்,
பள்ளரும் பட்டாலும் தீட்டென்பார்-தொட்டால்
பொதுக் கிணறும், குளமும் தீட்டென்பார்.

பொதுப்பணி பள்ளியில் படித்திட
ஆதித்திராவிடருக்கு இடமில்லை-ஐயரோ
இவர்களைக் கைநாட்டுப் பேர்வழிகள் என
இகழ்ந்து பழித்திட மறப்பதில்லை

கோயில்களிலும் ஏழைகளுக்கு இடமில்லை
நாஸ்திக மிலேச்சர் என நாமம் சூட்ட
நாளும் பார்பனர் நாவும் தயங்குவதில்லை

ஆதித்திராவிடப் பெண்களுக்கு, அங்கம் மறைக்க
மேலாடை எதற்கென்றார், அழகிய கருத்த
பருத்த கொங்கைகளை பார்வைகள் தழுவித் தடவிட
பார்பனஜாதிக்கு தடை ஏது என்றார்?


ஆதித்திராவிடரே இம் மண்ணின் ஆதிமைந்தர்
ஆரிய பார்பனரோ வந்து குடியேறிகளே
ஒன்றே குலம் ! ஒருவனே தேவன்! என்று முழங்கி
நன்றாய் வாழ்ந்த தமிழினம்
நலிந்திட யாத்திட்ட வைதிக நயவஞ்சகமே சாதியம்

செய்யும் தொழிலே தெய்வம்-சாதி என ஏதுமில்லை
உயர்வு தாழ்வு என்பது அநீதி-இறைவன்
நம் தந்தை, நாம் எல்லோரும் சகோதரர்-இது
இயேசு பெருமான் சொன்ன இறைநீதி

அஹம் பிரம்ம அஸ்மி -அறிந்தவருக்கு
சாதிகள் இல்லை-ஆதி சங்கரர் ஆனாலும்
சாதியம் பேசிடல் அண்ணார்க்கு இழிவே-பார்ப்பனர்
தெய்வம் என்பது சுவாமிகளுக்கும் சாபமே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-05-2023

அன்னையின் அன்பு







மூப்பும், பிணியும், வாட்டிடும் காலத்தே
பெற்று வளர்த்து ஆளாக்கிய அன்புப் பெற்றோரை
ஈவு, இரக்கமின்றி, குற்றவுணர்வு ஏதுமின்றிக்
கானகத்தில் கைவிடும் கொடும்பழக்கம்
ஜப்பானில் இருந்த இருண்ட காலம்.

தந்தை இறந்தபின், அம்மையப்பனாய் நின்று வளர்த்தவள்
அமுதாய் பாலையும் ஆடித்தூங்கத் தாய் மடியும் தந்தவள்
வயதானவள், வாழ்ந்து முடித்துவிட்டாள், வருந்திட ஏதுமில்லை-

ஊர் வழக்கமிது கானகத்தே கடைசி நாட்களைக் கழித்து
மடியட்டும் என்றே-தாயைத், தனயனும்
தனியாய் அழைத்துச் சென்றான் ஓர் நாள்.

ஆசை மனைவி வந்தபின்-வயது முதிர்ந்த
அன்னையும் செல்லாக் காசாக-கானகம் செல்வது
காலத்தை முந்தி வந்த கதையானது

வானமாய் விரிந்த உறவை, வரிந்து கட்டி
ஒழித்திட நினைத்தவன், விரைந்து முன் நடக்க
விதவைத் தாயோ தள்ளாடி பின் நடக்க,
தள்ளாமை தண்டித்த உடல் தள்ளாடியது

தனிமையில் வாழ்ந்து சாகும் எண்ணம் நெஞ்சைத் துண்டாட,
முன் சென்ற மகனைப் பின்தொடர்ந்தாள்-வந்த பாதையை
மகன் மறவாதிருக்க இலை குழைகளை ஒடித்துப் போட்டு
பின் நடந்தாள் பிணி வருத்தும் மூதாட்டி

இருள் சூழ்ந்த கானகத்தே-எட்டிப் பார்க்க
சூரியனும் கஷ்டப்பட-இரைக்காய்
கொடுவிலங்குகள் பதுங்கிக் காத்திருக்க
தள்ளாடி நடந்த தாய்

நெடுந்தூரம் நடந்த பின்-தாய்ப் பாலோடு,
வாழ்வையும் தானாமாய்த் தந்தவளை சினந்த தனயன்
“சீக்கிரம் நடங்கள், இருட்டி விடப்போகிறது,
உங்களை விட்டு விட்டு-வீடு திரும்பவேண்டும்-
மனைவியும், பிள்ளைகளும் என்க்காய் காத்திருப்பார்கள்”

பொங்கிய கண்ணீர் பூத்து நின்றிட-உழைப்பால்
காய்ந்த கைகள் இலை குழைகளை முறித்துப்
பாதையில் போட்டு நடந்து வர-கோபமுற்றவன்
“ ஏன் இந்தத் தொந்தரவு, இலை குழைகளைப்
பிய்துப் போடும் வேண்டாத வேலை”
சீக்கிரம் நடங்கள்” பரிவின்றிக் கடிந்தான்.

“மகனே, கானகமோ அடர்ந்தது
கால் நடந்த வழியோ வெகு தொலைவு
நீ திரும்பிப்போகையில் வழி தவறினால்
காட்டில் அலைய நேரிடும்

கொடிய விலங்குகள் உன்னைக் குதறிப் போட்டுவிடும்”
சீக்கிரம் நீ வீடு போய்ச் சேர
வந்த வழியை நீ மறந்திருப்பாய்-அம்மா
இலை குழைகளை போட்டு வந்த பாதையில்
நீ சென்றால் பத்திரமாய்
வீடு போய் சேருவாய் என் மகனே”





அன்னையின் வார்த்தைகள்
அக்கினி அம்புகளாய் நெஞ்சில் பாய-
அருவியாய் விழிகளில் கண்ணீர் பொங்கி ஓட
கல்லான நெஞ்சம் கரைந்துருகக்-தாயைக்
கட்டியணைத்துக் கதறினான்
அம்மா என்னை மன்னித்து விடு

பாதகன் நான் உனக்கு கொலைப் பாதகனானேன்
பரிவின்றிப் பாசமின்றித் தெய்வமே
உன்னை நடுக்காட்டில் கைவிடத் துணிந்தேன்
என் தாயே என்னை மன்னித்துவிடு

இக்கொடிய தண்டனையை-தள்ளாத வயதில்
தாயே நீ அனுபவிக்க-எப்படி எனக்கு மனம் வந்தது
பொல்லாத கல் மனசு எனக்கு அம்மா

பாலோடு, உதிரத்தையும் ஊட்டி வளர்த்தவளே
பத்து மாதம் சுமந்து பெற்றவளேஅம்மையப்பனாய்
நின்று காத்தவளே உன் அன்பை எப்படி மறந்தேன்?
கொடியவன் நான் அம்மா, அம்மா என்றழைக்கவும்
எனக்குத் தகுதியில்லை தாயே என் பிழை பொறுப்பாய்

Ubasute (姥捨て, "abandoning an old woman", also called *obasute* and sometimes *oyasute* 親捨て "abandoning a parent") is a mythical practice of senicide in Japan, whereby an infirm or elderly relative was carried to a mountain, or some other remote, desolate place, and left there to die.[1] Kunio Yanagita concluded that the ubasute folklore comes from India's Buddhist mythology.[2] According to the Kodansha Illustrated Encyclopedia of Japan, *ubasute* "is the subject of legend, but…does not seem ever to have been a common custom."[3]



காத்த தெய்வத்தை கட்டியணைத்துக் கதறினான்
ஊன் பதற, உயிர் பதற, உண்ட தாய்பாலின் சுவை
நாவிலினிக்க, அம்மா என்ற சொல்லோ உயிரை உருக்க
அம்மையப்பனாகி நின்ற தெய்வம், ஆளில்லாக் காட்டில் வாழ்வதா?
கொடு விலங்குகள் வேட்டையாடி உண்ண இரையாவதா?


எண்ணமோ இதயத்தை கொல்ல, நெஞ்மோ எரி நெருப்பில் வேக
விம்மியழுதவனை மார்போடணைத்து ஆறுதல் ஈந்தாள் அன்னை
உன் பிழை ஏதுமில்லை மகனே, ஊரார் விட்ட பிழை இது



கண்ணீரைத் துடைத்தவளைக் கட்டியணைத்தவன்
தூக்கித் தோளில் சுமந்து-கஞ்சன்
கண்ட பெருஞ் செல்வமாய் மகிழ்ந்து
அன்னையிட்ட பாதை வழி அருமை மகன்
வீடு நோக்கி விரைந்து நடந்தான்

விம்மும் நெஞ்சம் பொங்கி மகிழ
விழியிழந்தவன் பார்வை பெற்ற மகிழ்வு
அன்பு மகன் நெஞ்சை நிறைக்க
ஊரைப் புறந்தள்ளி அரிய உறவைப் போற்றி
மகனாய் மறுபடியும் பிறந்த அன்பு மகன்
மகிழ்வோடு வீடு நோக்கிக் கடுகி நடந்தான்





இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-05-2023

அன்பே சிவம்

காற்றில் ஆடும் சுடர் இல்லறத்தின் மகிமையைச் சொல்ல
எளிய வாழ்வு ஆசை அழித்த ஆனந்தம் சொல்ல
இன்பமாய் இறைவனை தொழுத தம்பதியர்
ஆனந்தமாக உறங்க ஆயுத்தமாகும் நேரம்

இடியும், மின்னலும், கூட்டி இசையோடு மழை பொழிய
ஏழையின் கதவை எவரோ தட்டும் சத்தம்

" நாமறியாத நண்பர் நம் வீட்டைத் தேடி வந்திருக்கின்றார்,
மழைக்கு ஒதுங்க இடம் கேட்கின்றார் -அன்பே கதவைத் திற"
"நமக்கோ நடமாட போதாத குடில்-இதில்
நண்பருக்கு ஏது இடம்" என்றார் மனைவி

அன்பே நம் குடில் மாளிகையல்ல-செல்வர் வீட்டில்தான்
கூடுதலாய் அதிதிகள் வந்தால் தங்க இடமில்லாமல் போகும்
ஏழையின் குடிலுக்கு எத்தனைபேர் வந்தாலும் இடமுண்டு
என்னவளே மனமுண்டானால் இடமுண்டு

குறுகிய உள்ளமிருந்தால்-மாளிகையும் குடிலாகும்
விசால மனமிருந்தால் குடிலும் மாளிகையாகும்
நாடி வந்தவருக்கு அன்பை மறுப்பது தவறு-இங்கே
இருவர் படுக்க மட்டும் இடமுண்டு-

இருக்கப் பலருக்கு நிறைய இடமுண்டு-தாள் திறவாய்
துணைவியும் கதவைத் திறக்க-மழையில்
நனைந்தவர் உள்ளே வந்தமர்ந்தார்

வந்தவரோடு கதைபேச, மீண்டும்
கதவைத் தட்டும் சத்தம்
வாயில் அருகே அமர்ந்தவரைப் பணித்தார்
"ஐயா நண்பர் வந்திருக்கின்றார்
கதவை திறவுங்கள்" வந்தவரோ திகைத்து
நமக்கே இடமில்லை இதில் இன்னொருவரா?

பக்கிரியின் அன்பை மறந்து பதில் கூறியவரைப் பார்த்துப் புன்னகையோடு
அன்பரே உமக்கு இடம் தரவில்லையா? இங்கு அன்பு நிறையவே உள்ளது
அது உங்களோடு முடிந்துவிடாது நாம் இன்னும் நெருங்கி உட்காரலாம்
குளிரும் குறையும் கதகதப்பாய் இருக்கும்

வந்தவரும் கதவைத் திறக்க இருவர் உள்ளே வர
வாருங்கள் அமருங்கள்-மழை முடியும்வரை
இருந்துவிட்டு செல்லுங்கள் அன்போடு
முகமன் கூறி முடிக்குமுன்
மீண்டும் யாரோ கதவை தட்டும் சத்தம்

“யாரோ நண்பர் வந்துள்ளார்
கதவை திறவுங்கள் கனிவோடு பக்கிரி வேண்ட
வாயிலில் அமர்ந்தவரோ வெளியே பார்த்துவிட்டு
கழுதை ஒன்று நிற்கின்றது கதவைத் திறக்க வேண்டுமா?

நண்பரே, செல்வர் வீடுகளில்-மனிதர்கள்
விலங்குகளாய் நடத்தப்படுகின்றனர்
ஆனால் ஏழை என் வீட்டில்-விலங்குகளும்
நண்பர்களே, அவர் உள்ளே வரட்டும்

எல்லோரும் எழுந்து நின்றால்-எல்லோருக்கும்-
ஏழையின் குடிலில் இடமிருக்கும்-இல்லையேல் அடியேன்
வெளியே செல்வேன் வந்தவருக்கு இடம் கிடைக்கும்
ஏழைக்கு கவலை இல்லை என்றார்

பகிரப்பகர வளரும் ஏழைப் பக்கிரியின்
அன்பு வானாய் விரிய
வல்ல அல்லாவும் மகிழ்ந்தே
அன்பு உள்ளமே நம் வீடு என்றார்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-05-2023

அந்த நாள் ஞாபகம்

வறுமையில் வாடாமல்-எளிமையாய்
வாழ்ந்த இனிய பொற்காலம் அன்று
வசதிகள் ஏதுமில்லை-ஆயினும்
வாழ்விலோ எந்த குறைகளுமில்லை

படிப்புத் தேனாய் இனிக்க, விளையாட்டும், நட்பும்
விருந்தாய்ச் சுவைக்க, விளையாடி மகிழ்ந்து, கூடிக் கதைபேசி,
அறிவும், நட்பும், ஆரோக்கியமும் வளரத்,
தாயின் அணைப்பில் தூங்கிய பொற்காலம்

ஒன்றாய் ஒரு தட்டில் உண்டும் நோயில்லை
ஒருவர்க்கொருவர் உதவியும்- எந்தக் குறைவில்லை
நட்புக்கோ அழிவில்லை, நண்பர்களுக்கோ குறைவில்லை
நல்லதைப் பேசி, நல்லதைக் கேட்டு, நல்லதைப் பார்த்திட
எல்லாம் நலமாயிருந்த பொற்காலம்.

அன்னையும், தந்தையும், ஆசிரியர்களும்
நூல் நிலையமும், கல்லூரியும்
அறிவோடு ஒழுக்கத்தையும்
ஊட்டி வளர்த்த பொற்காலம்.

ஓய்வு நாட்களில் வீட்டில் கூடும் பட்டி மன்றம்
நாவல், இலக்கியம், சினிமா என பல்சுவை பேசி-
அறிவை வளர்த்த பொன்மாலைப் பொழுதுகள்.

வேராய், விழுதாய் உறவுகள் தாங்கிக் கொள்ள,
சொந்தங்கள் பெருஞ்சொத்தாய் எம்மைப் போற்றி மகிழ
நண்பர்கள் நல்விருந்தாய் எம்மை மகிழ்வித்த நேரம்

எங்கும் நடந்து திரிந்து, கிணற்றில் அள்ளிக் குளித்து
சேவல் கூவிட மகிழ்ந்து எழுந்து நாளும் கோயிலுக்கு சென்று
பொறுப்போடு நடந்து, படித்த இனிய பொற்காலம்.

இருந்ததைப் பகிர்ந்து-எல்லோரும் மகிழ்ந்த
இனியகாலம். வேலை கிடைத்திட-ஊரைப் பிரிந்திட
பெற்றவருக்கும், உற்ற நண்பர்களுக்கும்
மடலெழுதி மகிழ்ந்த காலம்

கடிதம் எழுதுதல் காவியமாக
நெஞ்சின் நினைவுகள் கவிதையாக-
உணர்வின் பகிர்தலால் மகிழ்ந்த பொற்காலம்.
தபால்காரர் வருவிற்கு தவமிருந்த தபக்காலம்.

அன்று, நீருக்கு விலையில்லை
நண்பரோடு பேசிட மொபைல் போனில்லை
உறவைச் சீரழிக்கும் தொலைக் காட்சி இல்லை
ஆரோக்கியம் கெட்டிட கணிணி விளையாட்டில்லை.

இன்று, நெஞ்சை தொடாத முகநூல் நட்பு-
ஈரமில்லாத ஈமெயில்,
எல்லாம் ஏதோ தானோ எனும் நடிப்பு

அமைதியைத் தொலைத்து, மாடாய் உழைத்து
பணத்தேடலே வாழ்வாக, உறவுகள் சிதைய,
விவாகரத்துக்கள் பெருக-காரும்,
பங்களா வாழ்வும் இலட்சியக் கனவானது

கண்டதை உண்டு உடல் பருத்து நோயுற்று-
உறவழியக், கணிணியும், வலைப்பின்னலும்,
முகநூலும், மொபைல் போனும்,
வட்ஸ் அப்புமாய் கழியும் வாழ்வு

ஒரு நெருக்கமில்லா-இதயம் தொடாத நவீன கால
நரகமாய், இன்றைய உலகம்.?-பரபரப்பான உலகில்.
நட்பின், உறவின் பரவசம் தொலைத்து
கூடிக்கதைக்க நேரமின்றி ஓடி உழைக்கும் அவலம்.

இறைவனுக்கு இடமின்றி-உறவுகளைத் துண்டித்து
பெற்றோர்களைக் காப்பகங்களில் ஒதுக்கி
பள்ளி நட்பை மறந்து, உதட்டில் சிரிப்பை நடிப்பாக்கி,
படுத்தவுடன் வந்த தூக்கத்தை தொலைத்துவிட்டு-
மனக்கவலை தீர்க்க மதுவை நாடி-மனக்கலக்கத்தோடு
வெறுமையில் வாழும் துன்பக்காலம்.

செபமில்லை, தவமில்லை, மனதில் நிம்மதியில்லை
தமக்கென ஒரு சரித்திரமில்லை நண்பர் நினைத்து மகிழ
ஒரு கறுப்பு வெள்ளைப்படமில்லை
நெஞ்சில் அந்த நாள் ஞாபகமுமில்லை
அன்னை தந்தையை போற்றும் ஆனந்த நிலையில்லை
தாயின் மடிதேடும் பிள்ளையுமில்லை

தாரங்களும், விவாகரத்தால் மாறிட
தற்கொலைகளின் எண்ணிக்கை நாளும் கூடிட
யுத்தங்களும், போதைவஸ்துக்களும்
மனநோய்களும் அச்சுறுத்த நாம் எங்கே போகிறோம்
எங்கே வாழ்கிறோம்? என் இனிய நண்பர்களே?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-05-2023

அன்டனும், நானும்

ஓ என் அன்பு நண்பனே, எங்கு போவாய் என்னைப் பிரிந்து?
எங்கு மறைவாய் என்னை மறந்து? வானாய் விரிந்த
நம் நட்பும் மடியுமோ? தேனாய் இனிக்கும் நம் உறவும்
நெருப்பில் வேகுமோ? நீரில் மூழ்குமோ?

நீர் எழுதிய விழிகளும் நெருப்பெரியும்
இதயமும் என்னை வாட்டி வதைக்க
ஏன் இந்த சோதனை என் இறைவா?

உன் பிரிவோ நெருப்பாய் என்னைத் தீய்க்க
கண்ணீர் கடலில் இதயம் மூழ்கித் தவிக்க
பள்ளிப்பராயத்தில் தொடங்கிய நட்பு
பாசமலராய்ப் பூத்த நம் உறவு

ஒரு கொத்து ரொட்டியைப் பகிர்ந்துண்ட நாட்களும்
ஒன்றாய்த் தேனீர் அருந்தித், திரைப்படம் பார்த்த பொழுதுகளும்
ஆற்றோரம் அமர்ந்து, ஓடும் வெள்ளத்தையும், உறுமீன் வரக்
தவமிருந்த கொக்கையும், உலா வரும் நிலவையும்
இரசித்த பொழுதுகளும் கனவானதே

சித்தர்களும், முனிவர்களும், சோதிடமும்,
ஆன்மீகமும் பற்றிப் பேசிக்களித்த பொழுதுகளும்
பழங்கதையாய் போனதே

கடவுள் தந்த பெருங்கொடையே
கண்ணில் நீர் எழுதி-நட்பைக் கவிதையாய் எழுதி
கடவுளுக்கு நன்றி கூறுகின்றேன்
உன் உறவுக்காய் நம் நட்புக்காய்

எளிமையும், இனிமையுமானவன்
உண்மையின் வாடிவானவன்
உதவிக்கரம் நீட்டும் அரிய உறவானவன்-
அன்டன் என் நண்பன்

ஐயனே உன் நட்போ கல்லில் எழுத்தாய்
என் உள்ளத்தில் பதிந்திருக்க-உன் அன்பை இனிக்கும்
கரும்பாய் இதயம் சுவைத்திருக்க-உன் பிரிவோ
எனை வாட்டி வதைக்கும் நரகானதே நண்பா

நம் இறைவனே உன்னை அழைக்க
உன் துயர் முடிவுற்றதென்று
நன்றியோடு என் உள்ளம் இறைவனைத் துதிக்க
மரணம் தாண்டிய உறவு நம் நட்பு.

சொல்லொண்ணாத் துன்பமும், தோல்விகளும்,
கொடு நோயும் உன் வாழ்வில் -தனியனாய் நின்று பேராடி
தளர்வுறாமல் விசுவாசம் காத்த வீரன் நீ

துன்பத்திலும் நட்பைக் கற்போடு காத்து,
கற்கண்டாய்ச் சுவைத்தாய்
என் துயரங்களில் ஆறுதலாய் நின்று
என் கண்ணீரை நீ துடைத்தாய்.



நீயில்லா நட்புலகம் -நிலவில்லாத வானானது
முத்தான நம் நட்பும்-என் நெஞ்சில்
பெருஞ் சொத்தானது, நினைத்துப் புலம்பியழ
உன் அன்போ நினைவானது.

ஓ என் நண்பா தூங்கு, துன்ப துயர வாழ்வு
முடிந்ததென்று தூங்கு, இனித் துன்பமில்லை
இன்பமென்றே நம்பு, வானுரும்நிலவும்
தேன் மலர்களும் சாட்சியாக
என் உயிர் மூச்சு உள்ளவரை-நண்பா
என் இதயம் ஒரு போதும் உன்னை மறவாது.


இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-05-2023

அறிவும், அறிதலும்



“எதையெல்லாம் கற்க வேண்டுமோ-அவற்றை
எல்லாம் கற்றாயிற்று, நீ போகலாம்”
குரு விடை தர, குனிந்து பாதம் தொட்டு வணங்கி
ஆசீர் பெற்று குருகுலக் கல்வியை முடித்தான்

நிமிர்ந்த நடையும், நேரிய பார்வையுமாய்
அறிவால் நிரம்பிய ஆணவ மனம்-எல்லாம் அறிந்தேன்-
அறிந்திட இனி ஏதுமில்லை, வேதங்கள், சாஸ்திரங்கள் கற்றேன்-
விவாதத்தில் என்னை வெல்ல யாருமில்லை




மொழியோ, இலக்கணமோ, தத்துவமோ, அறிவியலோ
எல்லாம் கற்றேன் இனிக் கற்றுக்கொள்ள ஏதுமில்லை
கற்றுக்கொடுக்க என் குருவிடமும் எதுவுமில்லை
விறைத்த மார்பிலே விரிந்த கர்வம்
நடையிலோ ஆணவம்-விழிகளிளோ ஏளனம்.

வரும் மகனைச் சாளரம் வழியே பார்த்த தந்தை
ஆணவ வடிவம், நெஞ்சில் ஆணிகளை அடிக்க,
வேதனை விழிகளில் நீராய்ப் பூக்க எதைக்
கற்றான் என் மகன் சுவேதகேது?

தன்னை அறியும் அறிவைப் பெற்றானா?
தகவல் அறிவால் வந்த தலைக்கனம்
தந்தை மனதை நோகடிக்க-
வாடி நின்றார் உத்தமர் உத்தாலக்

ஒப்புக்காய்த் தந்தையைப் பணிந்தவன் உள்ளத்தில் பணிவில்லை
அடக்கமில்லை புண்பட்ட உள்ளம்-இரவல் அறிவால்
பண்படாத ஆணவ உள்ளத்தைக் கண்டு வாடியது.
மெய்யறிவு பெற்றவன் எளிமையானவன்



எதைக் கற்றாய்? இனிமேல் கற்றுக்கொள்வதற்கு ஏதுமில்லை
என்று சொல்லுமளவிற்கு எல்லாம் கற்றாயா?-
எது எல்லாத் துயர்களையும் துடைக்க் வல்லது
என்பதை அனுபூதியில் அறிந்தாயா?



நீ கற்றதெல்லாம் வெறும் தரவும், தகவல் அறிவும்
எவரும் அதனைக் கற்றுக்கொள்ளலாம்
எவருக்கும் அதை நீயும் கற்றுக் கொடுக்கலாம்

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது, திரும்பிப் போ,
கற்றுக்கொடுக்க முடியாத ஒன்றைக் கற்றுத்தரும்பாடி
உன் குருவை கேள்-அதுதான் ஞானம் பெற்ற குருவின் கலை


தந்தையின் கேள்வி , எல்லாம் அறிந்தேன்
என்றவனுக்கு ஏமாற்றமளித்திட
ஆணவமோ அலைபாய்ந்து விடை தேடிக் களைத்திட
அறிவின் வெறுமையை உணர்ந்தவன், நாணி விடைபெற்றான்.



குருவைப் பணிந்தவன் நடந்தை மொழிந்திட
"குரு கற்று தரமுடியாத கல்வியிது வழி காட்டுகிறேன்
கற்றுக்கொள்ள விரும்பினால் ஒழிய யாரும் பெறமுடியாத
மெய்யறிவு இது, உன்னையே நீ அறிவாய்."

என்னிடமுள்ள நானூறு பசுக்களையும்,
காளைகளையும் கானகத்திற்கு கூட்டிச்செல்-
எண்ணிக்கை ஆயிரமானவுடன் திரும்பி வா-
விடைதேடி விலங்குகளோடு சென்றவன்-சென்றான்
அறிதலை அறிந்தவர் காட்டிய அபூர்வ வழியில்

வாதாடி வெல்ல விலங்குகளும், விருட்சங்களும்
தவிர வேறு யாரும் இல்லாத கானகத்தில்
அறிவும், சிந்தனையும் அறைகூவிக் களைக்க
எதிரொலிக்க ஏதுமின்றி மௌனம் பதிலளிக்க
கற்றதெல்லாம் மறந்து காலம் கழிந்திட ஆணவம் கரைந்திட
ஆன்மா ஒளிர்ந்தது அகவட்டம் பூர்த்தியானது




தனிமையில் வாழ்ந்து, தனியே சிந்தித்து, தனியே உரையாடி,
தனிமையே துணையாக, இரைந்த உள்ளம் ஓய்திட
மனம் அழிந்திட- ஆனந்த அமைதி

இருமை நிறைந்த பிளவுபட்ட அறிவு மனம் மறைந்திட
தன்னை அறியும் பிரக்ஞானம் தன்னுள் மலர்ந்திட
அமைதி பிறந்திட, அகவொளி ஒளிர்ந்தது
கடந்த காலம் மறைந்து- எதிர்காலம் அழிந்திட
நிகழ்காலம் நிஜமானது.

திரும்பும் காலம் அறியாது, குருவின் மொழியும் நினையாது
பசுக்களும் பெருகி ஆயிரமானோம் வீடு போகும் நேரம்
வந்ததென்று உரைத்திட, ஆயிரம் பசுக்களோடு ஒன்றாய்
ஊர்நோக்கி அவனும் ***அதுவாய்*** நடந்தான்


அமைதியும், எளிமையும் ஆட்கொள்ள
ஆணவம் அழிந்து மெய்யழகு ஒளிர
ஊர் சொன்னது- சுவேதகேது
ஆயிரம் பசுக்களோடு-வருகிறான்






பார்த்த குருவும் பரவசமாகி-ஆயிரத்தொரு
பசுக்கள் வருகின்றன என்றே ஆனந்தக் கூத்தாட
வந்தவன் பணிந்து குருவை தொழ
உள்ளமும் பணிந்து உவகையால் நன்றி சொல்ல
பாசமாய் கட்டியணைத்தவர் அறிதலை அறிந்தவனை
அன்போடு நோக்கி மொழிந்தார்


கற்றது பூரணம்,-ஆணவம் அழிந்தது
மனம் மறைந்தது, இனிக் கற்க ஏதுமில்லை
அறிதலை அறிந்து கொண்டாய்
எதை கற்றுக்கொடுக்க முடியாதோ
அதை நீ அனுபூதியில் கற்றுக்கொண்டாய்
பிரக்ஞானம் பிரம்மம்






பக்குவமடைந்தவரின் வாழ்வில்
முதல் பாகம் ஆணவம் பெறுவது
இரண்டாம் பாகம் அதைத் துறந்து விடுவது
வட்டம் பூர்த்தியாகிட
விழிப்புணர்வு ஒளிரும்.-*ஓஷோ*

ஆதிப் பெற்பெற்றோர் வாழ்வில் நடந்த
அறிவுக் கனியின் சோதனை
இருமை அறிந்து ஆணவம் கழித்திட
அறிவாய் வீடு உனக்குள்ளே
அதுவே ஏதேன்-வாழ்வுக் கனி
மெய்யறிவு- விழிப்புணர்வு





இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-05-2023

ஐம்புலனும் ஆறறிவும்

நாதத்தின், கீதத்தின், மொழியின், இனியபரிமாணங்கள்
எட்டாத, சுவைக்காத வெகுதொலைவில்-
வசைமொழி கேளாது, புறங்கூறாத பொன்னுலகில்
பேச்சிழந்த, செவிப்புலனிழந்த குழந்தைகள்

குயிலின் கானமும், கிளியின் பேச்சும்
அன்னையின் தாலாட்டும் கிட்டாத
எட்டாத் தொலைவில் இந்தக் குழந்தைகள்.

சப்த ஸ்வரங்களும், சங்கீதமும் வாழும் உலகில்
சைகை மொழியாய் மாறிட-சத்தமின்றி
மௌனித்துப்போன உலகில்
மொழி பேதம் கடந்த இவர்கள் சாம்ராஜ்சியம்.

அழகின் அதிசயங்களை காணாது-
மலர்களின் வண்ணங்களை அறியாது-
அன்னை, தந்தை முகம் பாராது
அஸ்தமித்த இருண்ட உலகு-விழிப்புலனிழந்த
நிறபேதமறியா புனிதர்கள் வாழும் அதிசய உலகு

நிலவும், மலரும் இவர்கள் காணாத உலகு-
நித்தம் இருளோ எங்கும் நிறைந்த அழகு
வெள்ளைப் பிரம்பு வழி நடத்த -இருளில்
வாழும் ஒளியின் குழந்தைகள் இவர்கள்.

அன்பால் விழி கொடுங்கள் மானிடரே
ஒளி பெறட்டும் இவர்கள் உலகு.
ஒளியின் இறைவன் விடுக்கும் அழைப்பிது.

மலர்ந்தும் மலராத பாதி மலராய் -மூளை வளர்ச்சி
குன்றிய குழந்தைகள்-உடல் வளர்ந்திட,
குழந்தை உள்ளத்தால் சாதி, மத, மொழி,
இன பேதம் கடந்த இறையரசின் செல்வங்கள் இவர்கள்

வாருங்கள் மானிடரே-அன்பை பகிர்ந்து-இருண்ட
உலகை இன்புற வைப்போம்-புலனிழந்தாலும்
புதுமை குன்றாத அழகு இதயம்-என்றும்
இன்புற அன்னை, தந்தையாய் அரவணைப்போம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-05-2023

போதிமாதவ இயேசுகிறிஸ்து



மண், பொன், மணி முடியும் மகவையும்,
அன்பு மனையாளையும் துறந்த இளங்கோவும்
தம்மை அறிந்து புத்தநிலை அடைந்தார்
தாம் பெற்ற இன்பம் வையகம் பெறத்
தம்ம நெறி காட்டி போதிமரத்தடியில்
அமைதி பூக்க அமர்ந்தார்.



விண்ணரசைத் துறந்த இறைமகனும்
மனுமகனாய் ஏழ்மைக் கோலம் ஏற்றார்
முள்முடி தரித்த மன்னராய் சிலுவையில்
மானுட மீட்பிற்காய் தம் உயிர் ஈந்தார்

ஞான வழியில் சென்றவரும், அன்பு வழியில்
சிலுவையில், தம்மை அர்பணித்தவரும் போதித்த
வழியும், உண்மையும், வாழ்வும் ஒன்றே





உலகு இவர்களை புரிந்து கொள்ளவில்லை
வாழ்ந்தறியும் உண்மையை இன்றும் -வாழவோ
தம்முள் தேடவோ துடிக்கவில்லை

புத்தநிலையையும், கிறிஸ்து நிலையையும்
இருப்பின் அதி உன்னத விழிப்புணர்வு நிலைகள்
மதவாதத்தால் உலகில் இன்றும் அமைதியில்லை.
மதப்போர்களுக்கோ குறைவில்லை

போதிமரமும். சிலுவைமரமும் வெற்றுச் சின்னங்களாய் மாறிட
போதிமர நிழல்களில் அலங்காரப் புத்தர் சிலைகள்
கோயில் கோபுரங்களில் வண்ண வெற்றுச் சிலுவைகள்



போதிசத்துவர் நிழலில் அமைதி காண யாருமில்லை
இயேசு அளித்த அமைதியோ இன்று யாரிடமும் இல்லை
இன்றும் இயேசுவை முப்பது வெள்ளிக்கு விற்பதும்
மறுதலிப்பவருமாய்ச் சீடர்களின் அவல நிலை

இயேசுவின் எலும்பை படை வீரரும் முறிக்கவில்லை
கிறிஸ்தவத்தை பல்லாயிரமாய்ப் பிரித்த மூடர்களில்
அன்னாஸ்,கைபாஸ், ஏரோது, பிலாத்து. பரபாஸ்
பேதுரு, யூதாஸ், சவுல், பவுல் உண்டு-ஆனால்
இயேசு மட்டும் இல்லை-என்னே வேதனை!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-05-2023

இழப்பு

வான் மழை பொழிய மறந்தால் வயல் வெளி காடாகும்
வான் நிலவு காய மறுத்தால் அல்லி மலர நாளாகும்
கானமழை பொழிந்தே துணையை அழைக்கும் கவிக்குயில்
வாச மழை பொழிந்தே-பாசமாய்
வண்டினத்தை அழைக்கும் தேன்மலர்கள்

பார்வதியை காதலித்து ஏமாந்த -தேவதாஸீக்கு
வாழ்வே மாயம்-உறவை துறந்த சித்தார்தனோ
ஞான புத்தராய் உருமாற்றம்.

பொன்மானைத் தேடிய புருஷன் வாழ்வில்
ஏமாற்றம், பெண்மான் மனிதிலோ
கயவனிடம் சிறைப்பட்ட பெருந்துன்பம்

பத்துத் தலையிருந்து பலதும் கற்றறிந்த
விற்பன்னன், பலத்தால் பாராண்ட பெருமன்னன்
பிறன் மனை நாடி உயிரிழந்தான்
மண்ணில் வீழ்ந்தபோதே ஞானம் பெற்றான்

சூதாடி மனதில் மனைவியும் பகைடைப் பொருள்
பாண்டவரை மணந்தவள் வாழ்வோ
துயரக் கடல், மானம் காக்க முடியாத மறவர்
கூவியழைத்து காத்த கண்ணனோ காக்கும் இறைவன்

ஆணவம் கழித்தவன் உண்மையை அறிந்தான்
வாழ்வு பெற்றான்-இழப்பதன் மூலமே
பெற்றுக் கொள்ள முடியும்
கொடுப்பதன் மூலமே பெற்றுக் கொள்ள முடியும்

வாய்மையே தெய்வம் என வாழ்ந்த மன்னன்
மணிமுடி, கோல், குடை, படை இழந்தும்
மனைவி, பிள்ளை, தன்னை விற்றும், சுடலை
காத்தும், சத்தியம் காத்த மாமனிதன் அரிச்சந்திரன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-05-2023

எழில்

எழில் கண்டு எழிலாகி வண்ணப் பூம்பொழிலாள்
என்னுள்ளம் மலர குவளை விழி கண்டு தேன் தும்பியாய்
என் விழிகளும் சொக்க, கனிமொழியாள் மணிமொழியில்-
மனம், கானக்குயிலாகிக் கவிதை இசைத்ததே

அழகில் விழிகளும் காதலாகி மயங்க,
உயிரும், மெய்யும் கலந்த முத்தமிழாய்-தமிழினியும்-
என் உயிர், மெய்யில் கலந்தினிக்க,
பாலும், தேனும் கலந்த சுவை பாவை பருவத்தில்

நெஞ்சு துடிக்க, தழுவத் தவிக்க,
பார்த்தலே இனிக்கும் கோவைச் செவ்விதழ்
குறுநகையால் பாவையும் காதலை மொழிய
காதல் கிளிகளும் கானம் பாடிப் பறந்தனவே.

பருவத்தில் பெய்யும் மழையாய்-இளமைக் காதல்
அறம் அறிந்து, பொருள் தேடி, இன்பம் காண
காமனை வெல்ல கடவுள் தந்த கொடை காதல்
இல்லறம் நல்லறமாக வீடே வாழ்விற்கு விடை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-05-2023

எல்லாம் மாயைதானா?

கொண்டு வந்ததும் ஏதுமில்லை, கொண்டு போவதும் ஏதுமில்லை,
அம்மணமாய் பிறந்தே, அன்னை மடியில் தவழ்ந்தோம்
சிவமாய் இருக்கையில் பெயர் சொல்லி அழைத்தார்
சவமாய் போனபின் பிணம் எனப் பெயர் சூட்டுவார்

ஒப்பாரி வைத்துப் புலம்பி அழுது
நடந்தவனை, நாலுபேர் பாடையில் சுமந்து
எரித்தோ, புதைத்தோ-பின் குளித்து
மரித்தவன் நினைவை மறப்பார்

பாவம், புண்ணியம் புரியும் வாழ்வில் கர்மவினை அறுத்தோமா?
கருப்பைக் குழியில் மீண்டும் விழுவோமோ?
மரணம் வருமுன் ஆய்வது நன்று, ஆறுதல் கொள்வது நன்று

உண்டு, குடித்து உறவுகொண்டு சந்ததி பெருக்கினோம்-
அடி மாடாய் உழைத்து செல்வம் பெருக்கினோம்
சோகங்கள் பெருகிட சுதந்திரமாய்க் கண்ணீர் விட அஞ்சினோம்
மழையில் நனைந்து-யாரும் காணாமல்
மனத்துயர் கரைய அழுதோம், நாம் கோழைகளில்லை

எல்லாம் மாறும் இவ்வுலகில் ஏதும் நிரந்தரமில்லை
கனவுபோல் கலையும் வாழ்வு, கற்பூரமாய் தீயும் ஆயுள்
கவலைகள் சுமக்க இதயம் இல்லை
கடவுளை நினைக்க, காதல் கொள்ள
கடவள் தந்தது -இனிக்கும், துடிக்கும் இதயம்

சிரித்து மகிழாத நாட்கள் நடைப்பிணமாய் வாழ்ந்த பொழுதாகிட
சிந்தை மகிழ்வித்த உறவுகளோ இறைவன் தந்த கொடையானது.
ஒளியும், காற்றும், ஓய்வும், உணவும், நல் உழைப்பும்
நம்பிக்கையும், நட்பும், நல்லாரோக்கியம் தந்தது

நிலவும், மலர்களும், மழலைகளும் மனதை நெகிழவைக்க
அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வமாய் மனதில் நிலைக்க
என்னே அழகான வாழ்வு, அலையும் கடலும்-பாடும் பறவைகளும்
அழகு மலர்களும், சுழலும் பூமியும் என்னே அதிசய உலகு-இரசியுங்கள்

நானோ பயணி-வந்தவிடமும் தெரியவில்லை-
போகுமிடமும் புரியவில்லை மகிழ்ந்து பயணிக்க –மறவாது
“நான்” என்ற ஆணவம் துறப்பீர்

இறங்குமிடம் தெரியவில்லை
வாழ்வு மீண்டும் வாராது, வாழவைத்தால்
வாழவைக்கும் வாழ்வோ தெய்வீகம்.

மகிழ்ந்து சிரியுங்கள் மற்றவரை மகிழ்வித்து மகிழுங்கள்
ஏழைகளோடு இருப்பதை பகிருங்கள்
ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பீர்கள்.

எல்லாம் தெய்வீகம் எங்கும் தெய்வீகம்
இருப்பது தெய்வம் ஒன்றே காணத்தான் “ ***விழிப்புணர்வு***”
காலத்தில் கவலைகளும் கலைந்துபோகும்
சோகங்கள் நிரந்தரச் சொந்தமில்லை

சிரியுங்கள்- முகம் மலர்ந்து சிரியுங்கள்
சுற்றிலும் ஆனந்தம் மலர்வதைக் காண்பீர்கள்
புடமிட்ட பொன்னே மின்னும்
பட்டை தீட்டிய வைரமே ஒளிரும்

கூழாங்கற்களை தேடத் தேவையில்லை
பொன்னும் வைரமும் பூமியின் ஆழத்தில்
கட உள்ளே- கடவுளாவாய்

சத்தியம் மலிவானதல்ல, மலிவான
மனிதரிடம், புனிதத்தை எதிர்பார்காதீர்கள்
ஒளி எப்போதும் உயரத்தில்-
இருளோ அதல பாதாளத்தில்

நதிகளுக்குப் பாதைகளில்லை, கடல் சேர வரைபடங்களில்லை
அலைகள் ஓய்வதில்லை, ஆழ்கடல் அமைதி கலைவதில்லை
விண்ணிலே பறந்தாலும் கழுகு பிணங்களைத் தான் தேடும்
மண்ணிலே பூத்தலும்-மலர்கள் இறைவனைச் சேரும்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-05-2023

என் தேவனே என்னைப் பாருங்கள்

உலகெங்கும் ஓயாத யுத்தங்கள்-ஆறாய்
ஓடும் மனித இரத்தங்கள்
மதவாத, இனவாதப் பயங்கரவாதங்கள்-
காயீன் ஆபேலை கொல்லும் அவலங்கள்

வரலாற்றில் பல நூறு தெய்வங்கள்
தீயோரை அழித்து, நல்லோரை காத்து
நற்படிப்பினை சொல்லும் புராணங்கள்

பஞ்சமும், பிணியும், பயங்கரவாதமும் வாட்டிட
பாலியல் தொழிலாளர்களாய்-பெண்மை சீரழிந்திட
சிறுவர் துஷ்பிரயோகம், கருச்சிதைவு, போதைவஸ்து,
என நாளும் புதிய அவலங்கள், அகோரங்கள்

வல்லரசு கனவுக்காய்-அணுவாயுதச் சோதனைகள்
நல்லுறவோ நலிந்திட-நாளும் புதிய யுத்தங்கள்.

மதம் பிடித்த யானைகளாய்-மதவெறியர்கள்
சாரமற்ற உப்பாய் மாறும் சமயங்கள்
மானுடத்தை அழிக்கும் கொடிய யுத்தங்கள்
அகதிகளின், விதவைகளின் ஒப்பாரிகள்

பௌத்தர்களின் ஹிம்சை கண்டு
கற்சிலையான புத்தர் பெருமான்-இஸ்லாமியர்
பயங்கரவாதம் கண்டு சூனியமான அல்லா

சாதிவெறியால் நாறிடும் சனாதன தர்மம்
இந்து முஸ்லீம் கலவரங்களால்
காஷமீரில் இன்றும் ஓயாத அதர்மம்.

என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்
யூதர்களாய் மாறிடும் கிறிஸ்தவர்களைக் கண்டு
இன்றும் சிலுவையில் இயேசுவின் கதறல்கள்

பலஸ்தீனிய இரத்தம் கூவிக்களைக்க
யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய இரத்தத்தால் பூமி சிவக்க-
குருதிக் கடல் தாண்டி மதம் கொடுக்க
மனித நேய இனம் தேடி அலையும் மதவாத இறைவன்

மதவாதம், மானுடத்தை அச்சுறுத்தும் பயங்கரவாதமாய் மாறிட
அன்பும் உண்மையும் அகதிகளாய் புகலிடம் தேடி அலைந்திட
முகமதுவும் தோழர்களுமாய் கண்ணீரில் தவமிருந்து-கடவுளை
கூவிக்களைத்து ஐரோப்பா நோக்கி ஓடும் முஸ்லீம் அகதிகள்

நோய் தீர்த்து, பேய் விரட்டி மதம்மாற்றம் செய்ய
விவிலியங்களோடு அலைந்திடும் போதகர்கர்கள்
மதமே நோயாய், பேயாய் மாறிட-மனமாற்றம் தேடாது
மதமாற்றம் புரியும் மதவாதக் குருடர்கள்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ- அதுவும் நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
-மைல் கல்லையும் கடவுளாக்கி மயங்கிட்ட பக்தர்கள்?

ஈழதமிழர்களாய், றொகின்ஜா
முஸ்லீம் இனத்தவராய் துன்புறும் புத்தர் பெருமான்
அகதிகளாய், பஞ்சமும். நோயும், யுத்தமும்
வாட்டிடத் தென் சூடானில் துன்புறும் கிறிஸ்து

ஹச் யாத்திரையில் கஃபாவைச் சுற்றி ஏழுமுறை நடந்து
ஹரித்துவார், காசி. இராமேஸ்வரம் புனித யாத்திரை செய்து
புண்ணியம் தேடி கங்கையில் மூழ்கி பாவம் கரைத்து
ஆண்டுகள் இரண்டாயிரம் கடந்தும் இயேசு மீண்டும் வருகின்றார்
கோஷம் எழுப்பி கொண்டாடும் மதங்களின்
சாயம் வெளுத்திட நம்பிக்கை நலிந்திட வன்முறைகள்

கடவுளும் காணாமல் போயிட
கடவள் உண்டென்றும்-இல்லையென்றும்
உரைப்பவர் சொல்வதெல்லாம் ஒன்றே
தெரிந்தவர் புரிந்தார் -மற்றவர் திகைத்தார்

புதைபொருள் ஆய்வில் வரலாறு எங்கும் பலநூறு மதங்கள்
தொழுதிட்ட ஆயிரம் தெய்வங்கள்.-இன்று சிலைகளாய்,
சிற்பங்களாய் நூதன சாலைகளில்-பூசையும்,
வழிபாடுமின்றி வாடும் நிஜங்கள்.

காலச்சுவட்டில்- கண்ணீரில் தவமிருந்து கரையும்
மனித நம்பிக்கைகள் பிரித் ஒலிகளும் சத்தமாக,
புள்ளினங்களும் அஞ்சி விலகியோட? வெள்ளரசும்
அலங்காரமாகத், தம்மபதமும் போதனையான அவலம்

அமைதிப்புறாவும் கூடுகட்ட முடியாத
மரத்துண்டங்களாய் சிலுவை மரமும் மாறிட
“நற்செய்தியும்” நம்பிக்கையளிக்காத துயரம்.

சுன்னி-ஷியா யுத்தங்களால் எரி நரகாய் மாறிட
அமைதியிழந்த வேதமாய் அல்குரான்
சாதிய நெருப்பில் வெந்திடும் தலித்துக்கள்
பாட முடியாத கானமாய்ப் பகவத்கீதை

பாலஸ்தீன அகதிகளோ புலம்பியழ
எரியும் முட்செடியும் தீய்ந்து கருகிட
பழம் புத்தகமாய் பஞ்சாகம்- தோரா

பாரோவை வென்றவர்-ஹிட்லரிடம் தோற்றார்
மீண்டும் வருவேன் என்ற இயேசு
ஏனோ இன்றும் வரத் தாமதிக்கின்றார்

கீதை சொன்ன கண்ணனும் வாதையே பாதை எனும்
இந்து முஸ்லீம் மதவாதிகளுக்கு அஞ்சி
பாற்கடலில் பள்ளி கொண்டார்?

தன் சாயலாய் மனிதனை இறைவன் மண்ணால் படைத்திட-
மண் கல்லால் கடவுளைப் படைத்து-கற்பனையால்
மதங்களை படைத்த மனிதன்?

புத்தம் சரணம் கச்சாமி –அல்லாகு அக்பர்
ஹரே கிருஷ்ணா ஹரே இராமா-அல்லேலூயா
எல்லாம் கோஷங்களோ?-இறைவனும், மத முகமூடி
போட்ட வெருளியோ? இல்லை மாயையோ?

ஷலோம்-சலாம் அலேக்கும்-
சமாதானம் உங்களோடு-ஓம் சாந்தி
வெற்றுச் சம்பிரதாய வாழ்த்துக்களோ ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-05-2023

எங்கே நிம்மதி ?

கொண்டு வந்தது ஏதுமில்லை, கொண்டு போவதும் ஏதுமில்லை-
அழுகைக்கும், கொண்டாட்டத்திற்கும் கொஞ்சமும் பஞ்சமில்லை-
பாவ புண்ணிய மூட்டைகளோடு பயணி நாம்

பிறப்பும், இறப்பும் கடந்த பயணமே நம் வாழ்வு
விழிப்புணர்வு இல்லாத அந்தகனாய்
செல்லும் வழி தெரியாத பயணியாய் நான்

உடல் கொண்டு, உடல் சுவைத்து
“உடல் சமைப்பது” வாழ்வா?
உடல் கடந்து, காமமும் காதலாகிக்,
காதலும் பக்தியானால் முக்தியே

காமும் கடவுளின் பாதையில் முதல் அடியே
புலன் கடந்த பேரின்பம் வீடே-துறவிக்கு
குடிலும், மாளிகையும், காடும் ஒன்றே

விழிப்புணர்வோடு கூடிக்களிக்க வீடு கிடைக்கும்
பஞ்சணை சுகமும் இளமை இருக்கும் வரைக்கே
பாவையர் சுகம் பரமனை அடைவதற்கே

என்றும் நிலைப்பதில்லை இளமை
அறம், பொருள், சேர்த்து இன்பத்தை கொண்டாடி
வீடு போய் சேர்-வழியெல்லாம் இருட்டு
இதில் சின்னவீடு பெரிய வீடு எதற்கு?

மெய்யால் கிடைப்பது பொய்யே ,
பொழுது புலர எல்லாம் மாயையே
மூப்பும், பிணியும், சாவும் அழையா விருந்தாளி
விழிப்போடிருந்தால் வீடு- இல்லையேல் சுடுகாடு

சுட்ட தங்கம் பசும்பொன்னாகும்
சுடாத மனிதன் சுடலைச் சாம்பலாவான்
ஆசையின் பாதையில் ஆயிரம் கனவுகள்
பொன்மானெல்லாம் பொய்யே

இனிக்கும் மாதர் மேனிச்சுகமும், இளமை இருக்கும் வரைக்கே
விழிப்புணர்வோடு வியந்து காதல் செய், கலவி செய்
“சமாதி” உனதாகும் சச்சித்தானந்தம் கிட்டும்

சிவனும் நீ சக்தியும் நீ
உள்வட்டம் இணைய சிவசக்தி நீ

இலிங்கக் கோலூன்றி ஞானம் தேடி-
யோனிவழிச்சென்ற ஞானிகள் இல்லை
யோனியின் மூலத்தில் வீடுகள் இரண்டு
கருப்பை ஒன்று -கர்பகிரகம் மற்றொன்று

மீண்டும் பிறந்திட கருப்பைக் குழியில் வீழ்வதா?
பிறப்பறுத்து சிவமாய் வாழ்ந்திட கர்பகிரகம் சேர்வதா?
பாதை உன் முன்னால் -என்றும் பயணி நீ-பயணி

விந்தும் சிறுநீரும் வெளியேறும் வாயில் கோயிலுக்கு வழியா?
குருதியும், சிறு நீரும் வெளியேறும் யோனியில் மீண்டும் மீண்டும்-நீ
குடியிருக்க குடிசை கட்டுவதென்ன அடக்கிவைப்பதும் தீங்கே
அளவுக்கு மிஞ்சினால்-அமிர்தமும் நஞ்சே

மானிடா தேவனாகு எல்லாம் உன்னுள்ளே
உன்னை நீ அறிந்தால் எல்லாம் உனக்குள்ளே
நிலையில்லாததைத் தேடி நிம்மதியைத் தொலைக்காதே
மூடி மறைத்து. அஞ்சி வாழ்ந்து மனதாலும் பாவம் புரியாதே

ஆயிரம் கன்னிகள் கிடைத்தாலும் ஆசை அறுமோ?
ஆசையின் பாதையில் எண்ணிக்கை -வெறும் கணக்கே
யயாதியாய், ஞானி சாலமோனாய்
ஆயிரமாயிரம் மாதர் போகம் கிடைத்தாலும்
விடிந்தபின் எல்லாம் கனவே
எல்லாம் மாயை என்ற புலம்பலும் நிஜமே

விழித்தவன் கருப்பை குழியில் விழுவதில்லை
பிறப்பு துக்கம், இறப்பு துக்கம்,
விழி இருந்தும் வீழ்பவன் அந்தகனே
ஆணவம் கடந்த ஞானமே வீடு

ஞானத்தின் ஒளிவட்டம் ஆனந்தம்
காமவெப்ப சக்கரமோ தீய்க்கும் கனலே
அலைக்கழிக்கும் துன்பசாகரமே

விட்டிலாய் ஏனிந்த விபரீத விளையாட்டு
ஒழுகும் மனக்கூரையை சரி செய்
மாசு படிந்த மனக்கண்ணாடியை சுத்தம் செய்

மானிடா ஊரும் பாம்பாய் சபிக்கப்படாதே
விண்ணில் பறக்க இறக்கைகளை விரி-நீயும் தேவனே.
காதல் விலக்கப்பட்ட கனியல்ல

விரும்பிச் சுவைக்க ஆயிரம் கன்னிகள் தேடி விழித்தபின்
வெட்கி ஓடி ஒளியும் நிலை ஏனோ? வாழ்வு நம் கையில்
ஏதேன் தோட்டம் உனக்குள்ளே

விழித்தவனுக்கு வெளிச்சம் தேவையில்லை
கடவுளும் நீ- சாத்தானும் நீ-
தெளிந்தால் மோட்சம் உனக்குள்ளே.

இருளின்றி ஒளியில்லை-
ஒரு பரிமாணத்தின் இருளும், ஒளியும்,
இறைவனும், சாத்தானும் இருபக்கமே.

நான் என்பது ஆணவமே அகங்காரம் கழித்த
தூய மனம் தெய்வீகம் இறைதன்மை நம்முள்ளே
கடவுளாகிட-கட உள்ளே

தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
எளிய மனத்தவருக்கே இறையரசு
கோடி மனிதர் துன்பம் செய்ய நினைத்தால் என்ன?
இறைவன் நினைப்பதே பக்தனுக்கு நடக்கும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-05-2023

இறைவன் இருக்கின்றானா? மனிதன் கேட்கின்றான்

உலக சனத்தொகையில் ஒரு சதவீதத்தினர்-உலக செல்வத்தின
எண்பத்தியேழு சதவீதத்ததைக் சுவீகரிக்க, வறுமைக்
கோட்டின் கீழ் வாழும் மானுடம் எரிநரகத்தில் துன்புற-
இன்றைய உலகம். -இது ஒக்ஸ்பார்ம் அறிக்கையின் நிலவரம்

உணவு, உடை, உறைவிடம் தேடிப் போராடி
நலிவுறும் வாழ்வோ பாரச் சிலுவையானது-
நாளும் தொடரும் கல்வாரிப் பயணமானது.

சத்துணவு, கல்வி, மருத்துவம், பாதுகாப்பு செல்வர் சொத்தாக
காய்ந்த ரொட்டியும், கஞ்சும் ஏழைகளின் இன்பக் கனவாக
நீர்தேடி-நாளும் தீர்த்த யாத்திரைகள் குப்பைமேடுகளைக்
கோழிகள்போல் கிளறிப் பிழைக்கும் வாழ்வாதார நிலைகள்

பசியும், பிணியும், வறுமையும், பிறப்புரிமையாகிட
அழுக்கு சேரிகளில் ஆடு, மாடுகளாய் வாழ்ந்து
சத்துணவின்றி குழந்தைகள் மடிய, கொடிய நோய்களுக்கும்,
கொத்தடிமைத்தனத்திற்கும் வாழ்வோ விலைபோயிட-இறைவா
இதில் எங்கே சுதந்திரம்?-மானுட கௌரவம்?

பள்ளி மறந்த ஏழைப்பிள்ளைகள் கொத்தடிமைத் தொழிலாளராய்,
பாலியல் துஷ்பிரயோகத்திற்கும், விபச்சாரத்திற்கும்
பயங்கரவாதிகளின் ஆயுதப்போராட்டத்திற்கும்
பலிகடாவாய் நாளும் மாறிடும் அவல நிலை

வறியநாடுகளின் வளங்களைச் செல்வந்த நாடுகள் சூறையாடிட,
பயங்கரவாதத்தை தூண்டி மதவாத, இனவாதப் போர்கள் தொடர்ந்திட
தங்கம், எண்ணெய், வைரம், நிலக்கரி, கனிப்பொருள்கள் எல்லாம்
கடத்தல் பொருளாய் ஆயுதங்களுக்காய் விலைபோகும் கொடிய நிலை

கோடிகள் குவிக்கும் செல்வந்த கேடிகள்- நாளும்
வாழ்வே போராட்டமாக அல்லாடும் ஏழை அகதிகள்
ஆறாய், கடலாய் ஓடிப்பெருகும் இரத்தம், அணையாத் தீயாய்
தொடரும் யுத்தம், உன்னைப்போல் அயலானை நேசி-
வெற்றுப் போதனையான சத்தம்

ஆயுதப் பரிசோதனையின் ஆய்வு கூடங்களாய் வறியநாடுகள்-
காமகளியாட்டத்திற்கும், பாலியல் துஷ்பிரயோகத்திற்கும்
பலிகடாக்களாய் சிறுவர், சிறுமி கடத்தல்

உலகெங்கும் அகதிகளின் அழுகைச் சத்தம்
ஊரெங்கும் மதவாதப் போதனையோ மலிந்த சத்தம்
இயேசுவாய், புத்தராய் யாருமில்லை, சவுலாய்,
பவுலாய், பேதுருவாய் மாறியவருக்கு குறைவில்லை

மனித உயிர்களுக்கோ மலிவு விலை-நவீன
ஆயுதங்களோ உச்ச விலை-கடத்தல், கப்பம், கற்பழிப்பு,
காணாமற்போதலுக்கு சில்லறை விலை

ஐரோப்பா நோக்கிப் புதிய கனவுகளோடு
அகதிகளின் ஆழ்கடல் யாத்திரைகள்
ஆழ்கடலில் மூழ்கி மடிந்த பிணங்களிலும்
கனவு கலையாத ஆழ்ந்த நித்திரை

கண்ணீர் துடைக்க உறவுகள் இல்லை
ஆறுதல் சொல்ல இறைவனும் இல்லை
ஊழல் மலிந்த உலகில்-உதவிக்கரம் நீட்டிட-
நல்ல சமாரித்தன்களுக்கும் பஞ்சமான அவலநிலை

இயேசு இன்றும் வரவில்லை
விஷ்ணு இன்றும் கல்கி அவதாரம் எடுக்கவில்லை
விண்ணிலும் பயங்கரவாதமோ ? நட்சத்திர போர்களோ?
செல்வந்த நாடுகளின் தடையுத்தரவோ?

நான் பசியாய் இருந்தேன்-உண்ணத் தந்தீர்
தாகமாய் இருந்தேன்-தாகம் தணித்தீர்
அன்னியனாய் இருந்தேன்-என்னை ஏற்றுக்கொண்டீர்கள்
ஆடையின்றி இருந்தேன்-ஆடை அணிவித்தீர்கள்
நோயுற்றிருந்தேன்-என்னை கவனித்துக் கொண்டீர்கள்
சிறையில் இருந்தேன்- என்னைத் தேடி வந்தீர்கள்-(மத்-25:35-36)
மதம் கடந்த மனித நேயம் மடிந்ததா?

இறைவன் இருக்கின்றானா- இருந்தால் எங்கே வாழ்கிறான் ?
ஏழை உள்ளத்திலா, நல்லோர் இதயத்திலா?
அபினியும், போதையுமாய் ஆறுதல் தருவதுதானா மதம்?

ஆஸ்தீகம், நாஸ்தீகம் கழித்த
மதம் கடந்த உண்மை விடுதலை அளிக்கும்
பெருமான்களின் கீதம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-5-2023

மரணம்

இன்றோ, நாளையோ நானும் இறப்பேன்
தாய், தந்தை தந்த உடல் துறப்பேன்
மண்ணான உடல் மண்ணாகிட-மாந்தர்
எண்ணங்களுள் மக்கி மறையும் என் நினைவுகள்

பஞ்சபூதங்களின் சேர்க்கை மறைந்திட
பரவசப் பேரின்ப யாத்திரை தொடங்கிடும்
அகங்காரம் கழிந்திட்ட ஆனந்த மனது
ஆன்மா பிரபஞ்ச இருப்பில் ஒன்றாகி
சச்சித்தானந்தப் பெருவெளியில் கலந்திடக் களிப்பு

புற்தரை போதும் என் உடல் உறங்கிட
மானுடத்தை பிரித்திடும், மதச்சின்னங்கள் வேண்டாம்
இன, மொழி, மத. நிறம் கடந்த
மனிதனுக்கு அடையாளம் ஏதுமில்லை

புற்களும், காட்டுப் புஷ்பங்களும் கல்லறையை அலங்கரிக்க
-கானகுயில்களும், காட்டுப் பறவைகளும் களிகூர்ந்து பாட
நானுறங்குவது மயானபூமியல்ல,
மாத்ரு பூமி- என் தாய் மடி

சொந்தங்களே-கண்ணீர் வேண்டாம்
இது ஆனந்த உறக்கம்
தூபங்கள் வேண்டாம்-வளி மாசுறும்
தீபங்கள் வேண்டாம்
விட்டில்கள் விளையாடி மடிந்துவிடும்
புஷ்பங்கள் வேண்டாம்
மாலை வருமுன் வாடி விடும்.

ஒரு வாயில் கடந்து, மறுவாயில் வழியே
தொடங்கும் பயணம்தான் மரணமோ?
விரிந்து பரந்த ஒளியில் நம் புதுப்பிறப்பு- இன்பக்கலப்பு
சச்சித் ஆனந்த சிவப்பிரகாசத்தில் எம் இருப்பு

மலரும்போது-கருப்பைகுழி மடியும்போது மண்ணில் குழி
மரணம் மீண்டும் முளைப்பதற்கான -புது விதைப்பு
மரணம் என்று ஒன்றில்லை
எல்லாம் மாறுபடும் தோற்றங்களே

மரமாய் எழுந்தால்-கனி கொடுங்கள்
செடியாய் மலர்ந்தால் மலர் கொடுங்கள்
தன்னை அறிந்தவன்-
பிறப்பை கடக்கின்றான்-ஞானி

இருப்பது இருப்பொன்றே

எங்கும் சிவமே! இறையும் அதுவே!
எல்லாம் இறை மயமே
புத்த வெளியும் புனிதமே- சூனியமே

அன்பே சிவம்.

ஈஸா வாஸ்யமிதம் ஸர்வம் யுத்கிஞ்ச
ஜகத்யாம் ஜகத்-
உலகைத் தெய்வீகமாக்குங்கள்-அது கடவுளே
(ஈசாவாஸ்ய உபநிடதம்)

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-05-2023

கடவுள்

கடவுள் ஒரு நபரல்ல- இருப்பது கடவுள் தன்மையே
அன்பிதயங்களில் வாழும் இறைவனை
ஆலயங்களில் வீணே தேடவேண்டாம்
தூய உள்ளமே இறையில்லம்.

பூக்களை கொய்து-பூஜைகள் செய்து-
பூக்களை கொல்லவேண்டாம்
தேனீக்கள் பாவம்
அன்பினால் வாழ்வை அழகூட்டுங்கள்

கற்பூர தீபங்களையும்-நெய் விளக்குகளையும்
மெழுகுதிரிகளை ஏற்ற வேண்டாம்-உள்ளங்களில்
உண்மையின் ஒளியை ஏற்றுங்கள்
வாழ்வு ஒளி பெற விழிப்பாயிருங்கள்

முழந்தாட்படியிட்டு வேண்டுவதை விட
விழுந்த சகோதரனை தூக்கிவிடமண்டியிடுங்கள்
வானகத்தை நோக்கி கரம் விரித்து வேண்டுவதை விட-
இருப்பதை இல்லாதவரோடு பகிர்ந்து இன்புறுங்கள்

அங்கபிரதட்சணத்தை விட
எளிய மனத்தோராய் மாறுங்கள்
இறைவன் இன்புறுவான்

பால் அபிஷேங்கள் எதற்கு? அன்பினால்
உள்ளங்களை அபிஷேகம் செய்யுங்கள்
அன்பே சிவம்
கடவுளாய் நீங்கள் மாறுங்கள்
கடவுளே நீங்கள்.
சிலைகளை தொழுவதை விட
உண்மையை வாழ்வாக்குங்கள்

திருமுழுக்கும்,
ஒப்புறவு திருச்சாதனம் -ஒருபோதும்
பாவம் போக்காது

உறுதிப்பூசுதலும் பரிசுத்த ஆவியை பெற்றுத் தராது.
திருவருட்சாதனங்கள் கற்பனையே, பூசாரிகளின்
அடிமைத்தனத்திற்கு புது வழிமுறையே

உண்மையே விடுதலை அளிக்கும்
நம்பிக்கையின் ஆழத்தில் நசுங்குண்டது
சந்தேகமும்-சிந்தனையும்

காசி, இராமேஸ்வரமும்,
க.ஃ.பாவை சுற்றும் ஹச்யாத்திரைகள் வீணே
எதுவும் பாவம் போக்காது
எங்கு சென்றாலும் நிலை மாற்றம் இன்றி
எதுவும் நிறைவேறாது.

மானிடா விழிப்பாயிரு
ஆணவம் களைந்து தூயவனாய் மாறு
தந்தை நிறைவுடையோராய் இருப்பதுபோல்
நாமும் நிறைவுடையோராய் மாறலாம்

ஆணவம் துறத்தலே சாவி
நிஜத்துக்கு புறம்பானது -உண்மைக்கு சான்றாகாது
இயேசுவின கூற்று சத்தியமானது.

நீங்கள் தெய்வங்களே, உலகின் ஒளி நீங்கள்
உலகின் உப்பு நீங்கள், உங்கள் மீட்பர் நீங்களே

அன்பினால் எதிரியையும், நண்பணாக்கி-
ஆசை துறந்து
நான் எனும் ஆணவம் களைந்து
ஆனந்தம் கொள்வீர்-சச்சித்ஆனந்தமே
நம் மெய்யான இயல்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra

கலையும் இனிய காலைப்பொழுது

கதிரவன் வரவுகண்டு வானமகள்
காதலாகி நாணிச்சிவக்க,
வண்ணப்பூக்கள் மகிழ்ந்து சூடிக்கொள்,
வாசம் பூசிக்கொள் என்று பூங்கதவின் தாள் திறக்க,
புள்ளினங்கள் மகிழ்ந்து பூபாளம் இசைத்து
பள்ளியெழுச்சி பாடிடும் வைகறைப் பொழுது

வையகத்தை துயில் எழுப்ப-வண்ணச்சேவல்களும்
வாய்திறந்து கொக்கரக்கோ என்றே கதிரவனுக்கு கட்டியம் கூறிட-
மனதை மயக்கும் இசைக்கோலமாய் , மலர்க்கோலமாய்
வானில் தோன்றும் வண்ணக்கோலங்களோடு
நாளும் புலர்ந்த இனிய காலைப் பொழுது
கனவானது இன்று

இன்றோ மாதா கோயில்களும், மசூதிகளும்,
விகாரைகளும், ஆலயங்களும் -விடியலில்
எழுப்பிடும் வேண்டாத இரைச்சல்களால்
துன்புறும் காலைப் பொழுது.

அஞ்சி விழித்த புள்ளினங்கள் -பூபாளம் மறந்து கதற,
கட்டியம் கூறக் கண் விழித்த சேவல்கள் குரலைத் தாழ்த்தி கேவ-
தூக்கம் கலைந்து முதியோர்களும், நோயாளிகளும் வாட
பள்ளி மாணவர் படிப்பு கலைந்த கனவாக
மதவாதச் சத்தங்களால் மாசுறும் இனிய காலைப்பொழுது.

இதய நோய்கள் அதிகரிக்க, உடல், உளவியல் ரீதியல்
மாணவர் துன்புற, புள்ளினங்களின் இனப்பெருக்கமும்,
திசையறியும் நுண்ணறிவும் பாதிப்புற
செவிப்புலன் காக்க இறைவனை
வேண்டும் நாஸ்திகவாதிகளின் ஆஸ்திக நாகரீகம்
பக்திப் பாடல்களால் பயமுறுத்தும்
ஆஸ்திகவாதிகளின் அராஜக அநாகரீகம்

இசை கடந்த ஓசை நாதப்பிரம்மத்தை
அச்சுறுத்த, பள்ளி எழுச்சி கேட்காத
தொலைவில், கலையாத தூக்கத்தில்-
பள்ளி கொண்ட பக்த கேடிகளின்
இறைவனோ செவிடன்

சுப்பிரபாதமான புள்ளினங்களின் இசைக்கோலமும்,
பூவினங்களின் மலர்க்கோலமும்
வான் மகளின் நாணக்கோலமும்
வனப்பிழந்த அவலம் இங்கே-மதங்களோ அன்பிழந்து
பலி, சடங்காய் உருவழியும் அனர்த்தமும் இங்கே

சமூக அக்கறை ஆண்டில், சதா ஆலயங்களில்
காதை செவிடாக்கும் சத்தங்கள்-
நீதி மன்றமும், மனித உரிமையைக் காத்திட
வகுத்த சட்டங்களும், விழித்திட-ஆரயர்ச்சி மணி
அடித்து யாரெழுப்புவார் சத்தம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-05-2023

கலைத்த கூட்டின் கனவுகள்





விரிந்து பரந்த நீலவானம் மேலே
இடிந்து, தகர்ந்து, நொந்து, நைந்து, கற்குவியலாய்,
சிதைந்த ஊர்களும் உறவுகளும் கீழே

உறவு கொண்டாடிய ஊர்கள்
மனித நடமாற்றமின்றி நரகாய் மாறிட
தொடரும் கொடிய உள்நாட்டுப் போர்



ஒன்றாய் கூடி ஊரார் தொழுத பள்ளி,
வானில் உயர்ந்து வல்ல அல்லா ஒருவனே
என்று நாளும் முழங்கிய மசூதி
இடிந்து நொருங்கிப் புழுதியில் கிடந்தது

கண்ணீர் மழையைக் கண்கள் தூவ
க.ஃ.பாவைச் சுற்றும் பக்தியோடு-ஊரை
நடந்து கண்ணீர் மல்கிடப் பார்க்கின்றேன்



ஆயிரம் கனவுகளோடு, கல்லின் மேல் கல் வைத்து
களிப்போடு கட்டிய எம் வீடு கற்குவியலாய் இடிந்து கிடக்கின்றது.
எமக்காய்த் திறக்கும் கதவுகள் திறக்கவோ, பூட்டவோ வழியின்றி
நொருங்கி கிடந்திட- என் இல்லம் வீழ்ந்து கிடக்கின்றது.

கூடி குலாவிக் கதைபேசிக் களித்த தோட்டம்-
கொஞ்சும் கிளிகளாய் குழந்தைகள் பேசி மகிழ
கோலமயிலாய் மனைவி உலாவர
கொட்டும் மழையிலும், குளிரும் நிலவிலும்-
அன்பு உலாவிய வீடு இதயம் நொருங்கிட
இடிந்து சிதைந்து கிடக்கின்றது.



தட்டுத் தடுமாறி, தள்ளடி நுழைந்து தடவிப் பார்க்கின்றேன்
படித்து இரசித்த நூல்கள் பல திக்கும் கருகிக்கிடந்திட
பார்த்து மகிழப் பூத்து மணந்த ரோஜா வாடிக்கருகிட
யார் கலைத்தார் எங்கள் குருவிக் கூட்டை?



ஏன் அழித்தார் எங்கள் மலர் வனத்தை.?
வாய்விட்டு அலறி வார்த்தைகள் முட்ட
கண்ணீர் சிந்தி தரையை முத்தமிட்டு அழுதேன்
இன்ஷா அல்லா, சுபான் அல்லா கேவும் மனதில்
ஆறுதல் இல்லை, கூறும் வார்த்தைகளால் சாந்தி இல்லை

எங்கும் குண்டுகள் துளைத்த காயங்கள் தாங்கி
எம்மை காத்த கருணாலயம் கருணையில்லா மூர்க்கரால்
சிதைத்து உருகுலைக்கப்பட்டு உதிர்ந்து வாடிய மாலையாய்
இடிந்து, தகர்ந்து தரையில் கிடந்திட நொருங்கிய இதயம்

மண்ணோடு மண்ணகிப்போகும்-இடிபாடுகளுக்குள்
கலைந்து மறைந்த ஆயிரமாயிரம் வண்ணக் கனவுகள்,
கண்ணீர் சிந்திக் குருதி பெருகிடக் கற்குவியலாய் மாறிய ஊருக்குள்
புதைந்து மறைந்த ஆயிரமாயிரம் உறவுகளின்
புலம்பல்கள் மண்ணுக்குள் மெல்லக் கேட்கின்றன



எத்தனை கனவுகள் இங்கே சிதைந்தன
எத்தனை இலட்சம் உறவுகள் இங்கே மடிந்தன.
வியர்வையும், குருதியும் சிந்திய உழைப்பு வீணாய் போனதே
விருந்தாய் மகிழ்ந்து கொண்டாடிய சுற்றமும், சொந்தமும், நட்பும்,
பொய்யாய், பழங்கதையாய், கனவாய் ஆனதே.



ஊரை ஒருநாள் கட்டி எழுப்பலாம்
இழந்த உறவுகளை ? இதயம் கனக்க
வானை நிமிர்ந்து பார்க்கின்றேன்
பெருமூச்சைத் தவிர பதில் இல்லை,



எல்லாம் கனவாயிட இருண்ட மனதில் ஒளி ஏற்றிட யாருமின்றி
வல்ல அல்லாவை வாழ்த்திப் போற்றி-இல்லம் பார்த்து
கண்ணீர் சிந்திக் கதறி, முகம் குப்புற விழுந்து தொழுது
தரைபார்த்து நடக்கின்றேன்

உறவுகள் எல்லாம் உதிர்ந்து கலைந்த கனவாய் போன உலகில்-
இனி எதற்கு வீடு ? ஊரும், உறவும், நட்பும் உருவழிந்த தேசத்தில்
உறவு சொல்ல யாருமில்லாத ஏழைக்கு எதற்கு வீடு
நடைப்பிணத்துக்கு காடு போதும்.



சிரியா என் தேசமே-ஏனிந்தச் சீரழிவு நமக்கு?
ஷரியா சட்டமே யாருக்கு உன் நீதி?
இருள் படர, இடிபாடாய் மாறிடும் தேசத்தில்
ஒளி ஏற்றும் துப்பாக்கி வெளிச்சங்கள்.



எலிகளுக்கு வளைகளும், பறவைகளுக்கு கூடுகளுமிருக்க
நாடற்று வீடற்ற அகதிகளாய் அலையும் அப்பாவி மானுடம்
ஐவேளை தொழுதும் ஆறாத மனக் காயம்
அருவியாய் கண்ணீர் சிந்தியும் கரையாத மாயம்

கசங்கிக் கிடந்த அல்குரான் பக்கங்களை
மெல்லப் புரட்டி ஓதும் காற்று
தொழ மறக்காத இயற்கை-ஐவேளை தொழுதும்
பகை மறக்காத மனிதனோ விலங்கு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-05-2023

கலவரம்.

ஆண்மையை பறிக்கும் உணவுகள்
தாய்மையைக் கலைக்கும் உள்ளாடைகள்
இன அழிப்பின் புதிய உத்திகளாய்-முஸ்லீம்
உணவகங்களுக்கும், துணிக்கடைகளுக்கும் எதிராய்த்
திட்டமிட்ட பேரினவாதப் பிரச்சாரங்கள்

காட்டுத் தீயாய் செய்தி பரவிட, குலநாசம்
எனக் கொதித்த பேரினவாதம்-முஸ்லீம்களின்
பள்ளிகளையும், வாகனங்களையும், கடைகளையும்
கொளுத்திக் காடையர் நடத்திய அராஜம்

அம்பாறையில் தொடங்கி, கண்டியிலோ
தீப்பிடித்து எரிந்த அசுரயாகம்
காவல்துறை கைகட்டி வேடிக்கை பார்க்க
முஸ்லீம் உடைமைகளும், உயிர்களும்
ஆகுதியான பாவம்

ஒற்றுமையும், அமைதியும் இனவாதத் தீயில் ஒன்றாய் எரிந்திட
சீவர ஆடையிலும் கழுவியும் போகாத இரத்தக்கறைகள்
முதலைக் கண்ணீர் வடித்த பேரினவாத சிங்கள அரசிலோ
வெற்று அநுதாப உரைகள்.

ஸ்ரீபாத மலையில் காலடி பதித்தவரால்
கல்மனங்களில் தம்மத்தை பதிக்கமுடியவில்லை
மதம் பிடித்த யானையை அடக்கியவரால்
பேரினவாதத்தை அடக்க முடியவில்லை

பௌத்த மதத்தில் புத்தராய் யாருமில்லை
கிறஸ்தவத்தில் அன்னாய், கைபாஸீகளுக்கு குறைவில்லை
ஓதும் மதங்களும் ஒப்புக்கே-மதவாதம், இனவாதம்
கடக்காத ஆன்மீக வாதம் வரட்டுப் பிடிவாதம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-05-2023

காமவேதம்

"காமவேதம் நான்கு வேதங்களுக்கு
முன் தோன்றிய மானுட வேதம்"
ஆதி மனிதர் ஆதாம், ஏவாள் ஓதி
யாத்த காதல் யாகம்





சிவசக்தி நடனத்தின் அதிசய பாவம்
தேவரும், முனிவரும் ஓதிட்ட பரவச பாலியல் வேதம்.
படைப்பைத் தொடரும்-பஞ்சணை மந்திரம்
பரிசுத்த அர்தநாரிஸ்வர யோகம்

அங்கமெல்லாம் ஆனந்த மின்சாரம் பாய
நரம்புகள் சிலிர்த்து, நாடித் துடிப்புக் கூடிட
ஐம்புலன்களும் மயங்கிச் குருதி சூடேற-உடல்கள்
உரசிடத் தோன்றும் காமத்தீ யாகத்தீயாகும்





முத்தம் பருகி, பித்தம் தலைக்கேறி,
சித்தம், நினைப்பு , செய்கை மறைய, மனமழியக
ஒன்றுக்குள் ஒன்றான ஆனந்தப் பிணைப்பு
ஈருடல் ஒருடலாக ஒருயிராக அர்தநாரிஸ்வரப் பிறப்பு

உடலும், உலகும் ஆகுதியாய் மாற, மனம் எரிந்து சிவமாக
உணர்வுகள் கலந்து உயிரில் மோகனம் தாண்டவமாட
இதழமுதம் பருகி விழிகளும் காதல் போதையில் சிவக்க
காதற் காம வேள்வியில் உச்சத்தில்
விந்துக் கங்கை விளைநிலம் தேடிப் பாயும்

கருப்பை நாடி ஓடும் கங்கையை -சங்கமத்தில்
கைகூப்பிக் காணிக்கையாய் ஏற்றுக் களிக்கும் பெண்மை
புதிய உயிரின் விதைப்பு, படைப்பின் பரவசநிகழ்வு
அன்னை, தந்தையாய் மாறும் ஆனந்த அன்புறவு



ஆண் பெண் சங்கமத்தில் அர்தநாரீஸ்வர யோகம்-
மனம் கழிந்து காலம் அழிந்திட தொடரும் சம்போகம்
இறைவன், இறைவியாய் அன்பின் பாவம்
இன்றும் தொடரும் படைப்பின் முடிவில்லாத யாகம்



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-17-05-2023

காமம் கடந்து தள்ளாடி நடந்து

கார் குழலுக்கு மலரும், கயல்விழிகளுக்கு மையும்
கொவ்வை இதழ்களுக்கு செஞ்சாந்தும், அல்குலுக்கும்,
அழகிய செவிகளுக்கும் அசையும் குண்டலம்
பூண்ட அழகியால் அசைந்த மனது

கைவளையும், கால் கொலுசும் ஒலிக்க
குலுங்கி வரும் அழகோ நெஞ்சை குலுக்க,
வேல்விழிகள் தழுவி தேகம் மெலிய
தேன்மொழிகள் கேட்டு கரையும் மனம்

அன்னநடையில் பின்னலும் ஆட, அழகில் சிக்கி
மனமும் தள்ளாட கொடியிடை தழுவி
கொவ்வை இதழ் சுவைக்க இதயம் திண்டாட
பெண் இன்றிப் பேரின்பமில்லை மெய்யானதோ?

பொன்மேனி தழுவாமல்-பெண் இன்பம்
அறியாமல் சாவதில் பொருளில்லை
மயங்க வைத்தவளை மணமுடிக்க மனம் துடிக்க
கலங்கடித்தவளை கைத்தலம் பற்றத் தவிக்கும் இதயம்

கொடிது கொடிது காதல் காமம், கொடிது மனம் தவிக்க
காதலில் விழுந்த மனம் கவிபாடிக் களிக்க
காதல் ஏக்கத்தால் தவிக்க, காதலாகி
காமம் தீய்க நின்ற காதலன் யான்

மனதை மயக்கிய, மதுமலர் கூந்தலும் , காலக்கனலில் வெளிறி
நிறம்மாறி நரைசூடி வெளுக்க, ஈமத்தீயில் எரிந்து
நீறாகி கிடக்க, மலர்கொடியும் வாடி மனமயக்கம் தெளிய
காதலால் மயங்கியதும் இதற்கோ?
தழுவிக்களித்த மெய்யும் பொய்யே , என் நெஞ்சே

கோல் கொண்டு நடந்தாலும், வேல் விழிமாதரை
விரும்பும் காமம் நெஞ்சில் தணிவதில்லை,
நரை திரை வந்து- மரணம் நெருங்குதென்று அறிந்தும்
வாழ்வில் ஞானமில்லை-பற்றறுத்து
பரமனை சரணடைய மனமில்லை

பாழும் நெஞ்சோ பாவையர் சுகமும் இன்பமென்றலைய
பாழாய்போன உடல் இளமை கழித்து, முதுமை
அடைவதேனோ மனம் சலிக்க, தீராத காமம் தீயாய் எரிக்க
தீய்ந்தும் தீயாத மானுடன் நான்
காமத்தீ அணைப்பது எப்படி? கலங்கி நின்றேன்

மூப்பும், பிணியும் சாவும், வாட்டும் உடலை மெய்யென்றெண்ணி
காமக்கடலில் திளைத்தோம் மங்கையர் சுகம் அமுதென்று
இளமையை வீணாய் கழித்தோம், பசியும், காமமும் தீய்க்கும் உடலும்
ஈமத்தீயில் எரிந்து சாம்பலாக பிறவிப் பிணியறுக்க-பாவம் துறந்து
பரமனை தேட முதுமையிலும் ஞானமில்லை

முடிசார்ந்த மன்னரும் முடிவில் பிடி சாம்பலானார்
நிலையில்லாத வாழ்வில் நிம்மதி கண்டவர் யாருமில்லை
அறிந்தும் நிலைவாழ்வை தேட மனமில்லை
அழகிகளை தேடும் ஆர்வமோ-கனவிலும் குறைவில்லை

நிலையில்லாத உலகில் ஏதும் நிரந்தரமில்லை
எல்லாம் மாறும், காலத்தால் அழியும்
அழியா செல்வம் நமக்குள்ளே
அறிந்தால் முக்தி நமதே.

பிரம்மனும் தலையிழந்தான் காமத்தல்,
இராவணனும் மாண்டான் மோகத்தால்
காமத்தால் இந்திரன், சந்திரன் தன்னிலை
தாழ்ந்தார், முனிகளும் தவமிழந்தார்

அறம், பொருள் அறிந்தவா ஒழுக –
வள்ளுவன் வகுத்தான் இல்லறம்
இல்லறம் நல்லறமானால் வீடே
நாமடையும் பெரும் பேறு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra

காமன் கணைகள்

எதிரியின் கணைகள் இதயம் துளைத்தும் காயமுமில்லை
உடல் எங்கும் தைத்தும் வலிகள் இல்லை
உதிரம் சிந்தியும் உடலிலும், மனதிலும் நோவில்லை
மறுபடியும் களம் காண இதயம் துடிக்கும் நிலை

இனியவளே உன் விற்புருவமும், வேல்விழிகளும்
இதயத்தை துளைக்க, நெஞ்சு புண்ணானது
நினைவோ இமயச்சுமையானது

கனவும் உனதாக, கற்பனையும் நீயாக
காதலின் வலியில் இதயம் துடிக்குது
கன்னி நீ ஏவும் காமாஸ்திரங்களை எண்ணி
காளை என் நெஞ்சு நடுங்குது.

படை கண்டு அஞ்சா நெஞ்சம் பாவை உன் அழகு கண்டு நடுங்கிட
விழிகளின் பார்வையில் வேல்கள் பாய-விற்புருவமோ
மலர் கணைகளை ஏவ , குலுங்கும் முன் அழகில் யானைகள் பிளிர
அசையும் மதுமலர் கூந்தலில் ஆயிரம் நாகங்கள் நெளிய
கொடியுடலைத் தழுவத் துடிக்கும் என் உயிர்

குமுத வாயில் அமுது பருக என் நெஞ்சும் விடாய்க
கைவளையும், காற் கொலுசும் வெற்றிக்கு கட்டியம் கூற
தோல்வி அறியாத வீரனும் காதலில் விழுந்தே தோற்றான்
கன்னியிடம் காதல் என்றே சரணடைந்தான்.

படை கொண்டு வெல்ல இயலாத போர்க்களம்
காமன் கணை தொடுக்கும் கன்னியர் சுந்தரம்,
கனவிலும், நனவிலும் வருத்தம் மன்மத யுத்தம்
காமினியிடம் சரணாகதியே
மனம் கொட்டும் வெற்றி முரசின் சந்தம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-17-05-2023

காமத்திலிருந்து கடவுளுக்கு

சத்ய தரிசனம் கண்ட ஞானிகளும்
ஞானம் பெற்ற புத்தர்களும்,
தீர்த்தங்கரர்களும், பரமஹம்ஸர்களும்
வாழ்ந்த மண்ணோ பாரத பூமி

கண்ணகி, சீதை, பாஞ்சாலி, அருந்ததியைப்
பதிவிரதைகளாய் போற்றிடும் மண்ணில்
கற்போ மானுடருக்கு உயர் நீதி
கங்கையோ புண்ணிய நதி

இராமாயணம், மகா பாரதம், பகவத்கீதை, தம்ம பதம்,
திருக்குறள் பிறந்த மண்ணோ ஞான பூமி
சைவம், வைஷ்ணவம், பௌத்தம், சமணம்,
சாங்கியம் வளர்ந்த மண்ணோ ஆன்மீக பூமி

காம இலக்கியங்களாய்-வாத்ஸ்யாயனின்
காமசூத்திரமும் கோக்கரின் கொக்கோவும்,
கஜீராகோவில், கொனாராக்கில், பூரியில்
காமலீலைகளைச் சித்தரிக்கும் அற்புதச்
சிற்பக்கோயில்களும் அதிசயத்திலும், அதிசயம்.

மகாதேவனை வணங்கித் தொழ-அதிசயமாய்
ஆண் பெண் கூடலின் குறியீடாய் சிவலிங்கம்
காமம் கடந்த பாதையில்
கடவள் தரிசனம் காட்டும் தாந்திரா வேதம்

சேற்றில் மலர்ந்த வெண் தாமரையாய்
பாரதம் கண்ட மகத்தான உண்மை
அற்புதத்திலும் அற்புதம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-17-05-2023

கொடை வள்ளல்

வள்ளலாய் கண்ணண் வழங்கியதும் இருப்பதில் கொஞ்சமே,
வறுமை வாட்டிடும் ஏழை குசேலன் வழங்கிய பிடி அவலோ
வள்ளல்களின் தானத்தை மிஞ்சிடும் பெரும் கொடையே
இருந்ததில் கொஞ்சம் கொடுத்தார் மன்னன் கிருஷ்ணண்
இருந்ததையே கொடுத்தார் ஏழைக் குசேலன்

கர்ணன் வள்ளாண்மையை ஒரு முறை கண்ணன் புகழ
பொன்னும், பொருளும் எம்மிடம் இருந்தால்
நாமும் கொடுத்து மகிழ்வோம்-இதிலென்ன பெருமை
அருச்சுனன் பொறாமை கொள்ள
ஒரு நொடியில் தோன்றிய பொன் மலை
கொடுத்து மகிழ் வருகிறேன் என்றான் கிருஷ்ணன்

மாலை வந்தபோது வெட்டிக் கொடுத்த பொன்னோ சிறிதளவு
கூடி நின்ற கூட்டமோ கடலளவு -புன்னகைத்த கண்ணன்,
கர்ணனை வரவழைத்தே பொன் மலையை கொடுத்தான்
வள்ளல் நீ கொடுத்து மகிழ் கர்ணா என்று

இரந்த நின்ற ஊராரிடம், இம் மலையோ என் மலை
மகிழ்ந்தே வழங்குகிறேன் பொன் மலையை உங்களிடம்-இனி
இதுவோ உங்கள் மலை-வறுமை தீண்டாது நாளும் வாழுங்கள்
வள்ளளாய்க் கணப்பொழுதில் வாரி வழங்கிய கர்ணன்

கொடுக்கத் தெரிந்த உள்ளம்-அளந்து பார்ப்பதில்லை
அளந்து பார்க்கும் உள்ளத்தில் வள்ளன்மை இல்லை
உண்மை புரிந்திட நாணிய அருச்சுனன்
கர்ணனைப் போற்றினான் வள்ளல் நீ என்றே

அளந்து கொடுப்பது மனித இயல்பு
அள்ளிக் கொடுப்பது வள்ளல் இயல்பு-கர்ணனோ
வள்ளன்மைக்கு வாழும் சான்று -உலகில்
இவன்போல் பலர் இருந்தால் ஒழியும் வறுமை இன்று

கொடுத்துச் சிவந்த கரங்கள்-அறிந்தும்
கவச குண்டலங்களை அரிந்து கொடுத்திட
குருதி பொங்கிச் சிவந்த மேனி-நட்பிற்காய்
உயிரையும் கொடுத்த வள்ளன்மையின் அணி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-05-2023

கொங்குதேர் வாழ்க்கை

வண்ணங்களோ கண்களைப்பறிக்க
வாசமோ சுவாசத்தை மயக்க
ஸ்பரிசத்தால் மெய்யும் சிலிர்க்க
வண்ணமலர் ஆய்ந்து, வாசம் நுகர்ந்து
வாசப்பூக்களில் அமுதுண்டு வாழும்
வண்ணத்துப் பூச்சியே, வண்டுபடும்
வஞ்சிமகள் வாசகூந்தலை முகர்ந்து
வார்த்தை சொல்வாய்
என்னவள் கூந்தல் மணம்போல்
எங்கேனும் வாசமலர் உண்டோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

பூங்குழலும் பொற்கழலும்

கழலாட, கைவளையல்கள் ஆட,
பூங்குழலாட, மையிட்ட கயல்விழிகளாட,
இல்லயெனும் முல்லைக் கொடியிடை ஆட
குண்டலமாட, குதூகலத்தால் மனமாட
நிலாமுகத்தில் வில்லும், வேலுமாட
காந்தள் விரல்கள் ஆட
ஆடினாள் பரதம் ஆனந்த நர்த்தகி

காதலாகி என் மனமும் ஆனந்தக் கூத்தாட
கல்லில் உளியாட மொழியும் கவிபாடக்
சிலையிலும் உயிர் வந்தது
கன்னி நெஞ்சிலும் காதல் மலர்ந்தது.

மொழிபேசி, விழிபேசி, ஊடலால் மௌன மொழிபேசி
உணர்சியால் கண்ணீர் பேசி, உவகையால் கதைபேசி
புன்னகை பேசி, அலைபேசியல் உருகிக் கதைபேசி
காதலாகி கரைந்ததும், உடல் தழுவி உயிர் ஒன்றாகிட
உயிரே, உயிரே எனக் கரைந்ததும் காவியமானது.

காணத்தவித்து கண்டு மகிழ்ந்ததும்,
பேசத் தவித்து பேசி மகிழ்ந்ததும்,
வானத்தவனை ஒன்றாய் போற்றி புகழ்ந்ததும்,
பொன்மாலைப்பொழுதில் உலாவி
கவிபாடிக்களித்ததும்-இன்றோ வெறும்
நினைவானது-என் காதலும் கனவானது.
கண்ணீர்க் கதையானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

காதலுக்கு மரியாதை–லைலா மஜ்னு

கண் வழி நுழைந்து நெஞ்சுக்குள் புகுந்து காதல் தந்தாள்
காதல் வாசம் சுவாசத்தை நிறைக்க, பூ மணம் இதயத்தில் மணக்க,
புதுச்சுடர் இருளைக் கலைக்க, கனவுகள் எனக்குள் விழிக்க
காதல் தீபத்தை ஏற்றி வைத்தாள்
காதல் மரங்கொத்தி என் மனம் கொத்திப்பார்த்து
நெஞ்சில் காதல் கூடமைத்தாள்.



கனவுகள் பிறந்திட, கவலைகள் மறைந்திட
வண்டும் மலரும் கொண்டாடும் வசந்தவிழா
காதல் கிளிகளாய்ச் சோடி சேர்ந்த உள்ளங்கள்
வானம் பாடிகளாய் பாடி மகிழும் இதயங்கள்

இன்பமாய் வாழ்ந்த நாட்கள், இனிய
கனவாய்க் கலைந்திட,
நெஞ்சிலே காதலின் ஆறாத ரணம்
இதயமோ வாடிக்கருகிய பூவனம்

சுடுமணலில் விழுந்த புழுவாய் நெஞ்சம் துடிக்க
சட்டெரிக்கும் சூரியனாய்ப் பிரிவும் வருத்த
கண்ணில் நிறைந்தவளே கண்மறைந்து போனாள்
நெஞ்சில் நிறைந்தவளே நிம்மதியை எடுத்துச்சென்றாள்.



தேனிலும் இனிதான என் அன்பை
ஏனோ மறந்தாள்- ஏழ் கடலிலும் ஆழமான
என் காதலை ஏனோ துறந்தாள்.

ஏனடி என்னைப் பிரிந்தாய்-
ஏனடி என் நெஞ்சில் காதலை விதைத்தாய்?
மறக்க துடித்தும் முடியவில்லை-உறவைப்
பிரிக்க முனைந்தும் முடியவில்லை

செவ்வரி படர்ந்த விழிகளில் நீர் மலர்கள் பூத்திருக்க
செங்கமல முகத்தில்-சோகப் படர்தாமரைாய்
கருந்தாடி மூடிக்கிடக்க, பாலை மணலில் வீழ்ந்து கிடந்தான்
பட்ட மரமாய் வாடிக்கிடந்தான்- மஜ்னு

எல்லாம் மாயை தானோ-ஏழை மஜ்னுவின்
காதலும் வீணா? புலம்பி அழும் மனம்



பொன்மேனி தொட்டபோது, கன்னம் சிவக்க,
கருவிழிகள் நாணிக்கிறங்க, கட்டிக்கொள் என்னை
கட்டிக் கரும்பாய் கடித்துக் சுவை-பஞ்சைப்
பற்றிய நெருப்பாய் படர்ந்து என்னை எரித்துக்கொல்
பழரச மதுவை இதழ்களில் பருகிக் கொள்-என
நாணி அபிநயம் காட்டும் நீலநயனங்கள்

காதல் தீயில் மெய்யும் கருக, எரியும் மெழுகாய் இதயம் உருக
துடித்து களைக்காத இதயம்-அவளை நினைத்துக் களைக்க
அணைத்து மகிழ்ந்த மெய்யும் அனலில் பட்ட மெழுகாய் வெந்து உருக
தூக்கம் மறந்த விழிகள் துக்கித்து கண்ணீர் வடிக்க
ஏங்கித் தவிக்கும் இதயம் பெருமூச்சில் ஆவியாய்க் கரைய
ஏனடி என்னை மறந்தாய்?

மலர்சூடும் மாதே, என் மனவானின் முழுநிலவே
நீயின்றி காயும் என் வானம் காரிருளாய்ப் போனதடி
மலர்த்தேனின்றி- காதல் பூந்தேனி பசியால் வாடுதடி

ஒவ்வொரு துடிப்பிலும்-இதயம் தவிக்க
ஒவ்வவொரு பெருமூச்சும் அனலைப் பொழிய
கனவால் மலர்ந்த இரவும், கண்ணீரால் ஈரமான மஞ்சமும்
என் காதலைச் சொல்ல ஏனடி என் நெஞ்சில் மலர்ந்தாய்?



காதலுக்கு மொழி ஏது ? மதமேது?
கண்பார்த்து நெஞ்செழுதிய காதல்
கண்ணீர்க் காவியமோ? குருதி வரைந்த ஓவியமோ?

உனக்காய் பூத்த இதயம் வாடிக் களைக்க
நெஞ்சை நிறைத்த நேசம் துடித்துத் தவிக்க
இரு விழிகளும் கண்ணீர் சிந்திச் சிவக்க
ஏனடி இந்தச் சோதனை, மாறாத வேதனை?

மறவாதே என்றவளே என்னை மறந்து போனாள்
பிரியாதே என்றவளே என்னைப் பிரிந்து போனாள்-
நினைக்கத் தெரிந்த மனதிற்கு மறக்கத் தெரியவில்லை
வான் நிலவை காணும்போது -மனமும் நோகும்
வண்ண மலர்களை பார்க்கும் போது விழிகளில்
கண்ணீர்ப் பூக்கள் உதிரும்

ஒற்றைக் குயிலாய் இதயம் கரைந்து உயிரை வதைக்க
உன்னை பிரிந்தபோது உயிரை பிரிந்து வாடும் துயரம்
ஆணி வேரறுந்த மரமாய்ச் சாகும் அவலம்

அன்பே லைலா நீ எங்கே? என் நெஞ்சம் உனக்காய் அலைய
நிம்மதியோ என்னை விட்ட அகல ஏனடி என்னைப் பிரிந்தாய்?
தகிக்கும் சுடுமணலில் தள்ளாடி நடந்து விழுந்து, எழுந்து
மண்ணை முத்தமிட்டு, இது லைலா வாழும் நகரம்
லைலைா நடந்த பூமி , புலம்பும் மஜ்னுவை
மன்னனும் கண்டே மனமிளகி நின்றான்.



காதல் தோல்வியால் கலங்கி அழுகிறான் காளை
மன்னனுக்கு மந்திரி பதில் கூற,
கன்னி ஒருத்திக்காய் வாடும் காளை கண்டு
காவலனும் வியப்பிலாழ்ந்திட
பெண்ணுக்காய் புலம்பும் பேதையை
அழைத்து வாருங்கள் என்றான் அரசன்

மண்ணுக்காய், பொன்னுக்காய், மணிமுடிக்காய் போரிட்ட
மன்னர்கள் உண்டு, பெண்ணுக்காய் புலம்பியழும்
பேதை கண்டு வியந்தவனும் நகைத்தே
"மதுவின் போதை நாமறிவோம்
அழகு மங்கையர் போதையும் நாமறிவோம்

ஒரு மாதிற்காய் புலம்பும் பேதையே
ஒரு மங்கைக்காகவா இந்தக் கண்ணீர்?
ஒரு மடந்தைக்காகவோ இந்தப் பைத்தியக்கோலம்

அழகு மங்கையர் கூட்டம் சூழ நகைத்த மன்னன்
"மஜ்னு பெண்தானே வேண்டும்
என்னை சூழ்ந்த நிற்கும் பேரழகிகளில்
ஒருத்தியை தருகிறேன் பெற்றுக்கொள்"


வரிசையாய் நின்ற அழகிகள் எல்லாம்
வடிவிற்கு இலக்கணம் சொல்லி வானவில்லின் வண்ணம் காட்ட
அடி தொட்டு முடிவரை அழகைச் சொல்ல
ஆணிப்பொன்மேனியும், அழகு நடையும், பொங்கிய அழகில்
பூரித்த மார்புகளும், கார்குழலும், கருவிழிகளும்
சிற்றிடையும், செம்பவள இதழ்களும், முத்துப்பற்களும்,
மோகன சிரிப்பும் கண்டே ஆடவர் மனமும் ஆட்டம் காண
விழிகளுக்கோ அழகின் விருந்தோம்பல்
வியந்து நின்ற கவிகளின் புலமைக்கோ அழகின் அறைகூவல்

விழிபட்டு சிவந்தனவும், மொழிகேட்டு கனிந்தனவுமாய்
கன்னியர் அழகு கண்களை மயக்கி நெஞ்சங்களைக் கொல்ல
கண்டவர் சிந்தையிலே காமனும் குதூகலிக்க

பார்த்தவர் மீண்டும் பார்க்கத் தூண்டும் அழகையும்
பாராதவனாய் என் லைலா வேண்டும்
என் லைலா வேண்டும் அழுது புலம்பினான்
அழகைக் கடந்த அழகிய காதலன் மஜ்னு

அசந்த மன்னனும் அழகிலும் அழகோ உன் லைலா
அசத்தும் பேரழகோ-ஆச்சரியம்? அவளைக் காணவேண்டும்
கண்கள் அழகைப் பருகவேண்டும் கட்டளை பிறக்க படைகள் பறக்க
பாவையும் தோன்றினாள் பார்த்தீபன் அவையில்.

பார்த்தவர் இகழ்ந்திடப் பார்த்தீபனும் திகைத்திட
உச்சி முதல் பாதம் வரை அணங்கிடம்
அழகெனச் சொல்ல ஏதுமில்லை- விழி கோண
மொழி குளறத் தேய் பிறை நிலாவாய் அவள்



சுந்தரியல்ல, மோகினியல்ல அழகினைச் சொல்ல
தேன்மோழியல்ல, தேவதையல்ல,
மேனி காஞ்சனமல்ல, விழிகள் கயல்களுமல்ல
கனிரசம் பருக இதழ் கோவையும் அல்ல

பார்வையால் அளந்தவன் பாவையின்
அழகால் நிலைகுழைந்து கேட்டான்
மஜ்னு இவளா உன் காதலி-இவளுக்காகவா
இத்தனை அழுகை, வேதனை, புலம்பல்?

பார்த்த விழிகள் பழரசமாய்ப் பாவையைச் சுவைக்க
பருகிய இதயமும் காதல் போதையில் மிதக்க
இமைக்க மறந்து இமைகளும் இன்பத்தில் திளைக்க
கானக் குயில்களாய் இதயங்கள் கானமிசைக்க
மெய் மறந்து நின்ற காதலர் கண்டு, கண் வியந்த காவலன்

மன்னவன் கேள்வியால் புன்னகை மலர
மன்னவனே மாதர் மேனி சுகம் தாங்கள் அறிவீர்
மாதர் மனம் கவர் காதலனாய் வாழ்ந்திருந்தால்
காதலின் சுகம் நீரும் அறிந்திருப்பீர்

காமத்தை அறிந்த நீங்கள் காதலை அறியீர்-மன்னா
மஜ்னுவின் காதலைப் புரிய மஜ்னுவின் இதயம் வேண்டும்
காதலைப் புரிய காதலில் விழவேண்டும்
பிரிந்து தவிக்க வேண்டும், இன்புற ஊடல் வேண்டும்
காதல் இதயம் சார்ந்தது -உடல் கடந்த லைலாவின்
அழகைக் காண மஜ்னுவின் காதல் இதயம் வேண்டும்

அரசிருந்தும், அழகு மங்கையர் இருந்தும். காதலை நீங்கள்
அறியாத பரிதாபம், காதலே, காதலை அறியும் -காவலனே
காதலோ வரம், காமமோ சாபம், மன்னவன் நீங்கள்,
மாதரசி மனதிற்கு ஏழை நானோ காதல் மன்னவன்!

மெய் சாாந்த அழகே நீங்கள் காண்பது
உயிர் சார்ந்த அன்போ இதயம் காணும் காதல் என்பது
காதலருக்கே காதல் வரம்-காமத்திற்கு
காதல் கிட்டாத அறம் மன்னா



மண்ணரசைக் கைப்பற்ற பெரும் படைபோதும்-மாதரசிகள்
பூ மனதைக் கைப்பற்றக் காதல் இதயம் வேண்டும் மன்னா
காதல் இரு இதயங்களின் சங்கமம்
காமம் இரு உடல்கள் கூடும் பாலுணர்வின் பங்கம்

கவர்ச்சியின் பாதையில் காதல் இல்லை, ஊடலின் இன்பமில்லை
ஒருவர் ஒருவருக்காய் உருகிக்கரையும் இன்பத் தவிப்பில்லை
மதுவுண்டு, மாதர் சுகம் கொள்ளும் போதை காமுகருக்கே
உள்ளம் கரைந்து உள்ளம் கொள்ளைபோகும்
இன்பம் காதலுக்கே-காவலனாயிருந்தும்
காதல் இன்பமறியாத ஏழை நீ மன்னா-ஏழையாயிருந்தும்-
காதலர் உலகில் பெருஞ் செல்வன் நான் மன்னா



காதலைச் சுவைத்த இதயம்
வானவர் அமுதைச் சுவைத்த இன்பம் கொள்ள
மன்னவனும் தன் மனவெறுமை அறிந்து
காதலுக்கு மரியாதை செய்தான்.

மரணமும் எம்மைப் பிரிக்காது-மண்ணுக்குள் எம்மை
உயிரோடு புதைத்தாலும் மனதுக்குள் வாழும் காதல் மடியாது
காதலுக்கு ஏது மரணம்-காதலருக்கே மரணம்
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023



மலர்கள் மலர்ந்தன

என் தந்தையே-
உம்மை நான் மறந்தபோதெல்லாம்
வாடிய மலராய் உலர்ந்து போகின்றேன்
உம்மை மகிழ்ந்து நினைக்கும் போதெல்லாம்
புத்தம் பது மலாராய், வண்ணமும்,
வாசமும் நிறைய பூத்துக் குலுங்குகின்றேன்

நடந்து வந்த பாதையிலே எண்ணற்ற தோல்விகள்
உன் பிரசன்னம் எங்கே என்ற கேள்விகள்
இதயத்தை நொருக்கிய உறவும், பிரிவும்
எல்லாம் மாயைதானா என்றான மனதிலே
நிலைத்த விரக்தியும், வேதனையும்

இன்றோ-கடமையைச் செய்து
பலனை எதிர்பாராது-ஓய்வு கொண்ட மனம்
உன்னைச் சரணடைய
எண்ணில்லாத இன்பம் நெஞ்சில்

சும்மா இருந்து மனம் சுகம் காண
குழம்பிய குட்டை தெளிந்து-உலகைப் புரிந்திட
உன் பிரசன்னம் சத்சங்கமானது
உன் பிள்ளை நான்-என் தந்தை நீ
எனக்குச் சச்சித் ஆனந்தமானது

புரியாத தவத்திற்கு -இறைவா நீ தந்த வரம் பெரிது
உலகைக் கடந்திட-நீ தந்த தோல்விகள் ஆசீரானது-
தடைக் கற்கள், உன்னைச் சேரப் படிக்கற்களானது,
வாழ்வு மெய்யறிவுக்குப் படிப்பினையானது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

மனம்

விண்ணில் உலாவும் மேகங்களாய்,
ஓடும் நதிகளாய், எழுந்து வீழும் அலைகளாய்
தழுவிச் செல்லும் பூந்தென்றலாய்,
சுழன்று சுழன்று சுற்றி வரும் கோள்களாய்
கணந்தோறும் மாறிடும் மனதில்தான்
எத்தனை எத்தனை எண்ணங்கள்.

எண்ணங்களால் தோன்றும் வண்ண மனதில்தான்
எத்தனை எத்தனை ஆச்சரியங்கள்?
மனமே சிறை, மனமே தளை
ஆணவம், கன்மம், மாயை ஊஞ்சாலாடும் பூமி
கணந்தோறும் தோன்றி மறையும் ஆணவச் சாமி

மனம் கழிந்தால் ஆனந்தமே நம் உண்மை நிலை
தூய மனதிற்கே சத்திய தரிசனம்
எளிய மனதிற்கே இறையரசு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023